விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆனி 18 ஞாயிற்றுக்கிழமை (02.07.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 195

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

## யூலை 5 கரும்புலிகள் நாளை சிறப்பாக அனுஷ்டிக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யூலை 5 ஆம் திகதி கரும்புலி கள் நாளை உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்குமாறு யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

தாய்மண் விடிவுக்காக உயிர் நீத்த கரும்புலி மறவர்களை எதிர்வரும் கரும்புலி நாளில் நினைவு கூரக் கடமையுடையோம்.

1987 ஆம் ஆண்டு கரும்புலி மில்லரால் ஆரம்பிக்கப்பட்ட கரும்புலிகளின் வேள்வி இன்று வரை தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

தமிழினத்தின் தற்காப்புக் கவசங்களாகத் திகழ்ந்து தாய்மண் விடிவிற்காய் வெடிசுமந்து காற்றோடு காற்றாக, கடலோடு கடலாக, மண்ணோடு மண்ணாக கலந்த கரும்புலி மாவீரர்கள் தமிழ் மக்களால் நினைவு கூரப்பட வேண்டியவர்கள்என தமிழ் மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெற்றியின் இரக (10 ஆம் பக்கம் பார்க்க)

## வல்வையில் கடற்றொழிலுக்கு சென்ற இரு மீனவர்களை காணவில்லை!

### உறவினர்களால் ம.உ.ஆ.குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இரு மீனவர்களைக் காணவில்லை என்று இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடமும் யாழ்.மனித உரிமைகள் ஆணை குழுவிடமும் முறையிடப்பட்டுள்ளது.

தொண்டமானாறு வடபகுதிக் கடற்பரப்பில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு மீன்பிடித்துக் ..காண்டிருந்த இரு மீனவர்கள் காணாமல் போயுள்ளனர்.

தொண்டமானாறு கடற்பகுதியில் வெள்ளிக்கிழமை இரவு 400க்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது அவர்களைக் கடற்படையினர் தாக்கியதுடன் மீனவர்களின் படகுகள் மீது துப்பாக்கிச் சூடும் நடத்தியதாகவும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதில் பல லட்சம் (10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீதான தடை குறித்து

# ஐரோப்பிய ஒன்றியம் பரிசீலித்தால்

# க.கா.குழு தொடர்பில் ஆராயலாம்

### தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகள் தொடர்பான ஐரோப்பிய ஒன்றிய நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டால் கண்காணிப்புக் குழு தொடர்பான எமது நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்ய முடியும் என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் தெரிவித்துள்ளார்.

ரொய்ட்டர் செய்தி நிறுவனத்திற்கு அவர் அளித்த நேர்காணலில் இதனைத் தெரிவித்துள்ளார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)



## முக்கிய முடிவுகள் எடுப்பதற்காக ஐ.தே.கட்சி யூலை 4இல் கூடுகிறது

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டமும் செயற்குழுக் கூட்டமும் நாளை மறுதினம் நடைபெறவுள்ளது.

தற்போது நாட்டின் நெருக்கடியான நிலையில் பிரதான எதிர்க் கட்சி என்ற வகையில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக இக் கூட்டங்களில் ஆராயப் படவுள்ளது.

ஜேர்மனிக்குச் சுற்றுப் பயணம் மேற் கொண்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அங்கிருந்து இக் கூட்டங்களை கூட்டுமாறு ஆலோசனை வழங்கியுள்ளார்:

எதிர்வரும் 4 ஆம் திகதி அதிகாலை ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பவுள்ளார். அன்று மாலையே இவ்விரு கூட்டங்களையும் கட்சித் தலைமையகத்தில் கூட்டு மாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

சமாதான (10 ஆம் பக்கம் பார்க்க)

## தலைவர் பிரபாகரனால் நிதி அன்பளிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொதுமருத்துவமனைக்குத் தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஒரு லட்சம் ரூபா நிதி வழங்கியுள்ளார்.

கிளிநொச்சி பொது மருத்துவமனை மேம்பாட்டிற்கான கொடி வாரத்திற்கான தொடக்க நிகழ்வு நேற்றுக் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட மருத்துவ அதிகாரி (10 ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரக் கட்சியின் மறுசீரமைப்புக்கு அதன் புதிய தலைவர் உடனடி நடவடிக்கை

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை மறுசீர மைக்கும் நடவடிக்கையின் கீழ் 20 பலவீனமான தொகுதிகளின் அமைப்பாளர்களை நீக்கி விட்டு புதிதாக அமைப்பாளர்கள் நியமிக்கப்படவுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறி சேன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மைத்திரிபால சிறிசேன கூறியதாவது,

சுதந்திரக் கட்சியின் பலவீனமான தொகுதி அமைப்பாளர்கள் தொடர்பாக தொகுதிகள் அளவில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள் ளது. கட்சியின் தலைமைப் பதவியை ஏற்றிருக்கும் மகிந்தவின் ஆலோசனையின் பேரில் கட்சி முழு மறுசீரமைப்புக்கு உள்ளடக்கப்படவுள்ளது.

அதற்கமைய எதிர்வரும் 15,16 ஆம் திகதிகளில் கட்சியின் மாவட்ட ஏற்பாடுகளை மறு சீரமைக்குமாறு மாவட்டத் (10 ஆம் பக்கம் பார்க்க)

## திருகோணமலையில் மோதல்

திருகோணமலை மூதூர் புலியடிச்சந்தியில் வீதிச் சோதனையில் ஈடுபட்ட படையினர் மீது நேற்றுக் காலை விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியதாக இராணுவத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து மூதூர் கிழக்குப் பிரதேசத்தில் நேற்றுக்காலை 8 மணியிலிருந்து 11 மணிவரை எறிகணைத் தாக்குதல் மேற் கொள்ளப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இடையில் நிறுத்தப்பட்ட இந்தத்தாக்குதல் பின்னர் மீண்டும் பிற்பகல் 3 மணியிலிருந்து தொடர்வதாகவும் தெரிவிக்கப்பட்டது.சேத விபரங்கள் குறித்து எதுவும் தெரிய வரவில்லை.(ச-5)

## வன்னிக்குக் கொண்டு செல்ல இருந்த

## 73 ஆயிரம் பென்ரோச் பற்றறிகள் வவுனியாவில் பொலிஸாரால் மீட்பு

(வவுனியா)

வன்னிக்குக் கொண்டு செல்வதற்காக எடுத்து வரப்பட்டிருந்த 73 ஆயிரம் பென்ரோச் பற்றறிகளும் 24 பெட்டிகளில் அடைக்கப்பட்டிருந்த தலா 50 கிலோகிராம் எடை கொண்ட சைக்கிள் போல்ஸ் வகைகளும் பாதுகாப்புப் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தப் பொருட்கள் வவுனியா-கொழும்பு தனியார் போக்குவரத்து லொறி ஒன்றின் மூலம் வவுனியாவக்கு எடுக்குவரப்பட்டிருந்தன.

இப் பொருட்களை கிளிநொச்சிவாசி ஒருவர் கொள்முதல் செய்து அனுப்பியுள்ளதாக விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முஸ்லிம் வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான இந்த லொறியிலிருந்து வவுனியா நகரில் பொருட்கள் இறக்கப்பட்டிருந்த போதே சந்தேகத்தின் பேரில் பாதுகாப்புப் படையினர் அதனை சோதனையிட்டபோது இவை கைப்பற்றப்பட்டுள்ளன. (கு)

## வல்வெட்டித்துறைக் கடலில் மீனவர் படகு தாக்கி அழிப்பு

(பருத்தித்துறை)

வல்வெட்டித்துறை மதகடி மீனவர்கள் நேற்று இரவு படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற போது டோறாப் படகு ஒன்றில் வந்த கடற்படையினர் மீனவர்கள் மீது நடத்திய தாக்குதலில் ஒரு படகு தீப்பற்றி எரிந்துள்ளது.

அந்த படகிலிருந்த இரண்டு மீனவர்களைக் காண (10 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்





# உக்ரைனுக்கு கோல் சுனாமியாக மாறிய இத்தாலி அரையிறுதிக்கு இலகுவாக முன்னேறியது

இத்தாலி 3-0 என்ற கோல் கணக்கில் உக்ரைனை அபார வெற்றி பெற்று அரை



யிறுதிக்கு இலகுவாக முன்னேறியது.

நேற்று முந்தினம் ஹாம்பாக்கில் நடந்த காலிறுதியில் மூன்று முறை சம்பியன் இத்தாலி அணி, உலக கோப்பை தொடரில் முதன் முறையாக பங்கேற்கும் உக்ரைனை சந்தித்தது. ஆட்டத்தின் 6ஆவது நிமிடத்திலேயே இத்தாலி அணி கோல் போட்டது. நட்சத்திர வீரரான டோட்டி கொடுத்த பாசைப் பெற்ற ஸம்ப்ரோட்டா சுமார்



25 மீற்றர் தூரத்தில் இருந்து அடித்த சொட் கோல் ஆக மாற, இத்தாலி 1-0 என்ற முன்னிலை பெற்றது. இதற்கு அழகாக பதிலடி கொடுக்க உக்ரைன் கடுமையாகப் போராடியது. இந்த அணியின் தலைவர் ஷெவ்சென்கோ உள்ளிட்ட வீரர்கள் அடித்த பந்து கோல் போஸ்டில் பட்டுத் திரும்பியது. பினிஷிங் திறன் இல்லாததால் உக்ரைனால் கோல் எதுவும் அடிக்க இயலவில்லை.

முதல் பாதி முடிவில் இத்தாலி முன்



னிலை தொடர்ந்தது. இரண்டாவது பாதி ஆரம்பாகி 59ஆவது நிமிடத்தில் உக்ரைன் வீரர்களின் தடுப்புக்களைத் தகர்த்து டோட்டி அழகாக கிராஸ் செய்த பந்தை அப்படியே தலையால் முட்டி லூகா டோனி அருமையான கோல் போட இத்தாலி 2-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

மீண்டும் 69 ஆவது நிமிடத்தில் ஸாம்ரோட்டா கொடுத்த பாசை எளிமையாக டோனி அடிக்க பந்து வலைக்குள் செல்ல இத்தாலி 3-0 என்ற கணக்கில் உக்ரைனுக்கு பேரிடி கொடுத்தது.

3 கோல்கள் முன்னிலையிலிருந்த இத்தாலி அணியை அறிமுக அணி உக்



ரைன் போராடி கோல் போட முயற்சி செய்தும் பலன் கிடைக்கவில்லை.

போட்டியின் 80ஆவது நிமிடத்தில் உக்ரைனுக்கு கிடைத்த பிறி-கிக் உதையை 40 யார் தூரத்திலிருந்து செவ்சென்கோ அடிக்க பந்தை இலகுவாக இத்தாலி கோல்



கீப்பர் தடுத்தார்.

இவ்வாறு உக்ரைனுக்கு கிடைத்த வாய்ப்புகள் எல்லாம் கைநழுவிப் போக இறுதியில் இத்தாலி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது.

உலகக் கிண்ணத்திற்கு அறிமுக வரவான உக்ரைன் அணி காலிறுதி வரை முன்னேறிய திருப்தியுடன் போட்டியிலிருந்து விடைபெற்றது.

இத்தாலி அணி 1ஆவது அரையிறுதி



யில் ஜேர்மனி அணியை நாளை மறுதினம் பிரங்பேட்டில் சந்திக்கின்றது.

# அரையிறுதிக்கு முன்னேறியது போர்த்துக்கல் அதிஷ்டமில்லாமல் விடைபெற்றது இங்கிலாந்து

போர்த்துக்கல் இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் நடைபெற்ற மூன்றாவது காலிறுதிப் போட்டியில் பெனாட்டி ஷூட்



அவுட் மூலம் போர்த்துக்கல், 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறியது.

முதல் பாதியில் இரு அணிகளும் கோல் அடிக்காத நிலையில் சமனிலையில் இருந்தது.

இலங்கிலாந்தின் நட்சத்திரமும் அணித் தலைவருமான டேவிட் பெக்கம் காயமடைந்து முதல் பாதியில் மைதானத்தை விட்டு வெளியேறினார்.

இரண்டாவது பாதியில் இரு அணி வீரர்களும் முரட்டு ஆட்டத்தை வெளிப்படுத்தினர். போட்டியின் 62 நிமிடத்தில் போர்த்துக்கல் வீரர் ரிச்சட் - ஹார்வல் கோவை தாக்கினார் என்ற குற்றத்திற்காக இங்கிலாந்து வீரர் ரூணி நடுவரினால் சிவப்பு அட்டை காண்பித்து வெளி யேற்றப் பட்டார்.

தொடர்ந்து இரண்டாவது பாதியிலும் மேலதிக 30 நிமிடங்களிலும் 10 வீரர்களுடனேயே



விளையாட வேண்டிய நிலை ஏற்பட்டது.

இரண்டாவது பாதி முடிவடைந்து மேலதிக 30 நிமிடங்கள் வழங்கப் பட்டது. இதன்போது இரு அணிகளுக்கும் கிடைத்த வாய்ப்புக்களை நழுவ விட்டனர்.

மொத்தமாக 120 நிமிடங்கள் நிறை வடைய போட்டியின் முடிபைத்தீர்மானிக்க பெனால்ட்டி ஷூட் அவுட் வழங்கப் பட்டது.

இதன்போது தமது ஐந்து பெனால்ட்டி உதை







களில் 3ஐ கோல்களாக மாற்றி போர்த்துக்கல் அணி வெற்றியை உறுதி செய் தது.

ஜேர்மனி வீரர்களின் பெனாட்டி உதைகளில் மூன்றை சாதுரியமாகத்தடுத்தார் போர்த்துக்கல் கோல்கீப்பர்.

இதனால் இறுதியில் போர்த்துக்கல் அணி 3:1 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறியது. அதிஷ்டமில்லாத இங்கிலாந்து தொடரை விட்டு விடைபெற்றது.

அமிர்தன்

# மூடப்படும் நிலையை நெருங்கும் பாடசாலைகள்

கோண்டாவில் றோ.க.த.க பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை வரவரக் குறைவடைந்து வருவதனால் பாடசாலை மூடப்படும் ஆபத்தை எதிர்நோக்கி வருகிறது என அப் பகுதி மக்கள் அச்சம் தெரிவிக்கிறார்கள்.

இப் பாடசாலைச் சுற்றாடலில் வசிப்பவர்கள், அதிக பணத்தை செலுத்தியாவது யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட புலமைப் பரிசில் பரீட்சையில் அதிக மாணவர்கள் சித்தியடையும் பாடசாலைகள் மற்றும் பெரிய பாடசாலைகளுக்கு தமது பிள்ளைகளை அனுப்புவதனால் இந் நிலை தோன்றியுள்ளது.

கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலை, இராமகிருஷ்ண மகாவித்தியாலயம், இந்து மகா வித்தியாலயம், பரஞ்சோதி வித்தியாசாலை எனப் பல பாடசாலைகள் அமைந்திருப்பினும் ஆரம்ப காலங்களில் றோ.க.த.க. பாடசாலையிலும் அதிக மாணவர்கள் கல்வி கற்று வந்திருக்கிறார்கள். 1982 ஆம் ஆண்டு 200 மாணவர்கள் வரை கல்வி கற்றிருப்பினும் தற்போது 48 மாணவர்களே உள்ளனர்.

| தரம் | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 | 7 | 5 | 12 |
| 2 | 7 | 3 | 10 |
| 3 | 4 | 2 | 6 |
| 4 | 2 | 4 | 6 |
| 5 | 8 | 6 | 14 |
| | 28 | 20 | 48 |

மாணவர்களின் எண்ணிக்கை குறைவானது. தொடர்ந்து நீடிக்குமாயின் இப் பாடசாலை மூடப்படும் அபாயம் உண்டு. அவ்வாறு மூடப்படும் ஆயின் அதனை மீளத் திறப்பது என்பது மிகக் கடினமான காரியமாகும்.

இந்நிலை தொடர்பாக பல தடவைகள் அப்பகுதி மக்களுக்கும், பெற்றோர்களுக்கும் சுட்டிக் காட்டியும் யாவரும் கவனத்தில் கொள்ளவில்லை. பாடசாலை அபிவிருத்தி சங்கமோ, பழைய மாணவர் சங்கமோ இந் நிலையைப் போக்குவதற்கு எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை.

இச் சுற்றாடலில் பல்வேறு காரணங்களுக்காக மாணவர்கள் பாடசாலையில் இருந்து இடைவிலகுதல், பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்பாமை போன்ற செயற்பாடுகள் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கோண்டாவில் றோ.க.த.க. பாடசாலையைப் போன்று அரியாலை மேற்கு ஆனந்தா பாடசாலையும் மாணவர் குறைவினால் மூடப்படும் ஆபத்தை எதிர்நோக்குகிறது. (து-36)

# ஜே.வி.பி.,ஹெல உறுமயவைக் கைவிட்டு எங்களுடன் இணைந்து செயற்படுங்கள்

## மஹிந்தவுக்கு ஐ.தே.க அழைப்பு

ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமயவை கைவிட்டு எங்களுடன் இணையுங்கள் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஐக்கிய தேசியக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

கொழும்பு ஊடகவியலாளர்களிடம் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்றஉறுப்பினர்ராஜிதசேனாரட்ண இது தொடர்பில் கூறுகையில்,

போர் வெறியர்கள் உடனிருப்பதால் நாடு எதிர்நோக்கியுள்ள பிரதான பிரச்சினைக்கு மஹிந்தவால் தீர்வுகாண முடியாது. அவர்களை அரசாங்கத்திலிருந்து எவ்வளவு விரைவாக வெளியேற்ற முடியுமோ அவ்வளவு விரைவாக வெளியேற்ற வேண்டும்.

ஜே.வி.பிமற்றும் ஜாதிக ஹெல உறுமயவை திருமணம் செய்து கொண்டதால் மஹிந்தவின் அரசாங்கமானது ஊனமுற்ற குழந்தையைப் பெற்றுள்ளது. ஆரோக்கியமான குழந்தையை உருவாக்க வேண்டுமானால் ஐக்கிய தேசியக் கட்சியை திருமணம்செய்துகொள்ள வேண்டும்.

அரசாங்கத்தின் கொள்கைகள் தெளிவாகக் கூறப்படாத வரை அனைத்து ஆலோசனைக்குழுவில் ஐக்கிய தேசியக் கட்சி இடம்பெறாது. 1971 மற்றும் 1989 களில் ஜே.வி.பியினர் நடத்திய கிளர்ச்சியானது படுதோல்வியடைந்தது. ஆகையால் அவர்களின் இராணுவ யோசனையானது நாட்டை மேலும் சீர்குலைத்து போர் வெடிக்கும் நிலையை உருவாக்கும். கருணா குழு ஆயுதக் களைவை மேற்கொண்டால் விடுதலைப் புலிகள் பேச்சுக்கு வருவார்களா என்று மஹிந்த கேட்டுள்ளதன் மூலம் கருணா குழுவுக்கும் அரசாங்கத்துக்குமான உறவை இப்போது சுவதேசத்தின் முன் ஒப்புக்கொண்டு விட்டார் என்றார். (து)

# நல்லதோர் சமூகத்தை உருவாக்க அனைவரும் முன்வர வேண்டும்

(கோப்பாய்)

துள்ளி வரும் பிள்ளைகளை அன்னைக்கு அடுத்ததாக அள்ளி அரவணைத்து பள்ளிக்குத் தயார் செய்யும் பாரிய பொறுப்பை குறைந்த வேதனத்துடன் நிறைந்த சேவை மனப்பான்மையுடன் சுமந்து நிற்பவர்கள் முன்பள்ளி ஆசிரியர்களே என்பதனை யாரும் ஒருபோதும் மறுதலிக்க முடியாது.

எனவே அவர்களை ஊக்கு விப்பதில் அரசும் அரச சார்பற்ற நிறுவனங்களும் கூடுதல் கவ்னம் செலுத்த வேண்டியது. காலத்தின் தேவையென கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் சனசமூக நிலைய முன்பள்ளி விளையாட்டு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பளர் த. பஞ்சலிங்கம் தெரிவித்தார். நிலையத் தலைவர் மு.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கள்ளங்கபடமற்ற குழந்தைகள் ஒன்றாகக் குதூகலித்து பயிற்சிகளைப் பெற்று பலதரப்பட்ட பாடசாலைகளுக்குப் பிரிந்து செல்லவுள்ளார்கள். இவர்கள் இங்கு பெற்ற பயிற்சியின் நிறைவும் அதன் பூரிப்பும் அவர்கள் செல்லவுள்ள பாடசாலைக்குப் பெருமையைத் தேடித்தரும்.

இன்றைய நிகழ்வு பெற்றோர்களினதும் மற்றோர்களினதும் மனதைப் பூரிப்படையச் செய்யுமாயின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக அதற்குக் கட்டுப்பட்டு பாடசாலையில் வாழப் பழகும் பிள்ளைகளுக்கு வழிகாட்டியாகவும் ஊன்றுகோலாகவும் ஆசிரியர்களுக்குத் துணைபுரிபவர்களாகவும் பெற்றோர்கள் இன்று எப்படியோ அதே போன்று எந் நாட்களிலும் இருக்க வேண்டும். அதுவே நல்லொழுக்கமுடன் கூடிய கல்வியைப் பிள்ளை பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பாக அமையும் இன்றைய கல்வி உலகில் கற்பித்தலை விட கற்றலே கனதியாகவுள்ளது.

எனவே மாறி வரும் உலகிற்கேற்ப இக் குழந்தைகள்ளைத் தயார்படுத்துவதில் அனைத்துத் தரப்பினரும் பங்காளிகளாகச் செயற்படுவது பொருத்தமானது. அதன் போதே நல்லதோர் சமுதாயத்தை உருவாக்க முடியும் என்றார். (து-79)

# தமிழர்கள் வாழும் பகுதியில் தனிநபர் விபரம் சேகரிப்பு

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய சூழ்நிலை காரணமாக பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரிக்கும் நோக்குடன் கொழும்பு உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் வசிப்பவர்களின் தனிநபர் விபரங்கள் சேகரிக்கப்பட்டு கணனி மயப்படுத்தப் படவுள்ளன. இதற்கான நடவடிக்கைகளை ஜனாதிபதி செயலகம் பொலிஸ் திணைக்களத்தினூடாக மேற்கொள்ளவுள்ளது.

தமிழ் மக்கள் செறிந்து வாழும் வெள்ளவத்தை போன்ற பகுதிகளில் விசேட ஏற்பாடுகளின் கீழ் பதிவுகள் மேற்கொள்ளப்படும்.

கொழும்பு உட்பட நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், தனிப்பட்ட ஒவ்வொருவர் தொடர்பான தகவல்களையும் சேகரித்து கணனி மயப்படுத்தப் படும் வகையில் இப்புதிய திட்டம் நடைமுறைக்கு வரவுள்ளது.

இத்தனிநபர் தகவல் சேகரிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப் படும் அதேநேரம் கொழும்பில் சில பகுதிகள் அதியுயர் பாதுகாப்பு வலயங்களாகவும் அறிவிக்கப்படவுள்ளன. இப்போது, களனி அனல் மின் நிலையம் அமைந்துள்ள பகுதியை அதியுயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. (ச-5)


## சிறப்பு பட்டமளிப்பு

பருத்தித்துறை காளிகோயில் 14.06.2006 புதன்கிழமை நடைபெற்ற மஹா கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 12 தினங்கள் காலை மண்டலாபிஷேகத்தையும், மாலை ஸ்ரீ சக்கிர யந்திர பூசையையும் வெகு சிறப்பாக நடாத்தி வைத்த பெருமதிப்புக்குரிய சிவஸ்ரீ-தாணு-வாசு தேவா ஐயா அவர்கட்கு "ஆகம கிரியா ரத்னா" என்னும் சிறப்பு விருதை வழங்கிக் கௌரவித்து குரு ஆசிபெற்று மன மகிழ்கின்றோம்.

இங்ஙனம்
சுபம் திருமதி புஸ்பாம்பிகை சிவபாலசிங்கம்
அம்பிகையின் தொண்டர்கள்
(465).


# பொதுக்கூட்டம்

அரியாலை சனசமூக நிலையம் நடாத்தும் "நிலையத்தின் தற்போதைய நிலை" என்னும்விசேடபொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு மேற்படி நிலையத்தில் நடைபெறவுள்ளது. (க-7)

# கந்தபுராணப் படிப்பின் பூர்த்தி விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் தேரடியில் கடந்த ஜனவரி மாதம் 6 ஆம் திகதி தொடக்கம் இடம்பெற்று வந்த கந்த புராண படலப் படிப்பின் பூர்த்தி விழா இன்று நல்லூர் தேரடியில் நடைபெறவுள்ளது, (க)

## மணி பல்லவத்தில் மஹோற்சவம்



## நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

## இன்று ஏழாம் திருவிழா

### சீறடி சாருவோர்க்கே!

பாரும், புனலும், கனலும், வெங்
காலும், படர்விசும்பும்
ஊறும் முருகு சுவை ஒளி
ஊறு ஒலி ஒன்று படச்
சேரும் தலைவி, சிவகாம
சுந்தரி சீறடிக்கே
சாரும் தவம் உடையார்
படையாத தனம் இலையே!

அபிராமி அந்தாதி

### விடிவு ஒன்று காட்டு

நாக பாம்பின் மீது
நடனம் புரியும் தாயே
சோகக் காட்சி கண்டும்
சும்மா இருக்க லாமோ?
தாகத் தோடு வந்து
தஞ்சம் கோரி நின்றோம்
வேக மாக எமக்கு
விடிவு ஒன்று காட்டு!

கவிஞர் வ.யோகனந்தசிவம்

### வளம் பல பெருகும்

ஈழ மாதின் நுதலெனை அமையும்
யாழ்குடா வதனில் திலகமாம் நயினை
தீவகந் தன்னில் கோயில்கொண் டருளிய
நாகம்மாவின் பெருவிழா வதனில்
அடியவர் கூடிப் பண்ணிசை பாடி
வீதிவலம் வரும் அம்மையை வணங்கும்
காட்சியைக் கண்டு கண் குளிர்வோரின்
வாழ்வு சிறக்கும் வளம்பல பெருகும்

கவிமணி கந்தமுருகேசதாசனார்

### கருணை காட்டிட வந்திடு தாயே

சீர் பெற்றுயர் நயினைப்பதி உறையும் பெருந் தேவி
பார் காத்திட பவனி வந்திடும் ஸ்ரீ ஆதிபராசக்தி
போர்நீக்கிட கருணைத் திருவிழி நீதிறந்திட வேண்டும்
சீர் பெற்றுயர் நயினைப்பதி உறையும் எங்கள் தாயே!

அலைகடல் மேவிட பள்ளி கொள்ளும்
நாகபூஷணி எந்தனுக்கு வரமருள் தா
கலை அறுபத்துநான்கும் ஒருங்கே கொண்டு
உறையும் நாககன்னியே வரமருள் தா
மலையரசன் மகளாய் வந்துதித்த தங்கையே
தரிசனம் செய்வோர்க்கு வரமருள்தா
கொலை வெறி நீங்க கொடுமை மறைந்திட
குளிர்விழிக் கருணை காட்டிடு தாயே

தும்பளையூர் ம.பாங்கயன்

### நாகத்தின் மகிமை

அஞ்சுதல்லை நாகம்மா
கொஞ்சு விளையாடுதம்மா
பத்துத்தலை நாகம்மா
பதிந்து விளையாடுதம்மா
செந்தலை நாகம்மா சேர்ந்து விளையாடுதம்மா
கருந்தலை நாகம்மா காக்குதம்மாவுன்
கொலுவில்

சேஷஎன்ற பாம்பையையெல்லாம்
சேரவே பூண்டசக்தி
நாகமென்ற பாம்பையையெல்லாம்
நலமாகப் பூண்டசக்தி
அரவமெனும் பாம்பை யெல்லாம்
அழகாக அணிந்தசக்தி
நாகங்குடை பிடிக்க நற்பாம்பு தாலாட்ட
பூரணமாய்ப் பூண்டாயுன் பூவடிக்கு நாம் சரணம்!

சின்கந்தையா பொன்னாவளை

## இன்று ஒரு தகவல்

# மருதுபாண்டியர்

சிவகங்கைக்குப் பக்கத்தில் ஏதோ ஒரு கிராமம் ஒரு நாள் விடியற்காலை நேரம் குதிரையில் அவர் வந்து கொண்டிருக்கிறார். முதல் நாள் எதிரிகளுடன் போராடி அவர்கள் கையில் சிக்காமல் தப்பித்து வந்திருக்கிறர்ா யார் அவர்? மருதுபாண்டியர் பரோபகார சிந்தை சிவபக்தி புலவர்களை ஆதரிக்கும் இயல்பு குடிமக்களைத் தாய் போல் காப்பாற்றக்கூடிய தகைமை இப்படி யெல்லாம் இருந்ததும் கடைசிகாலத்தில் அவருக்கும் எதிரிகள்.

பலமுறை அவரைப் பிடிக்கப் பகைவர்கள் முயற்சித்தார்கள் முடியவில்லை. ஒரு முறை திருக்கோஷ்டியூர் பெருமாள் கோவிலுக்கு எதிரேயுள்ள ஒரு மண்டத்தில் இவர் தங்கியிருந்தார். அது எதிரிகளுக்குத் தெரிந்துவிட்டது. ஊர் எல்லைக்கு அவர்கள் வந்துவிட்டனர். என்ற சேதி இவருக்கு எட்டியது. உடனே குதிரைக் குகாரணைக் கூட அழைத்துக்கொண்டு புறப்பட்டார். வலது கையில் சிலந்தி உண்டாகி வேதனை கொடுத்தது. அதில் ஒரு கட்டுபபோட்டுக்கொண்டு புறப்பட்டுவிட்டார். அப்படிப் புறபட்டுத்தான் மறுநாள் காலையில் அந்தக்கிராமத்திற்கு வந்து சேர்ந்தார்.

ஒரு கூரைவீட்டின் முன் ஒரு வயதான அம்மா கோல மிட்டுக்கொண்டிருந்தார். அங்கேபோய் குதிரை நின்றது. அந்த அம்மா நிமிர்ந்து பார்த்தார். மருதுபாண்டியரின் கம்பீரமான தோற்றம் அவரது மனதில் அன்பை உண்டாக்கியது. 'யாரப்பா... நீ உனக்கு என்ன வேண்டும்?' என்று கேட்டார். 'அம்மா எனக்குப் பசியாக இருக்கிறது தாகமாக இருக்கிறது ஏதாவது இருந்தால் கொடுங்கள் ' என்றார். 'இரவு தண்ணீரில் போட்டுவைத்திருக்கும் பழைய சோறு இருக்கிறது. வா... தருகிறேன்' என்றார்.

அதேபோல் அன்பாக உபசரித்தார். அம்மா! இரவு முழுதும நான் துங்கவில்லை இங்கே மறைவாக ஒரு இடம்கிடைத்தால் குதிரையைக் கட்டிபோட்டுவிட்டு உறங்கலாம் என்று பார்க்கிறேன் என்றார். அது தானா பெரிது வீட்டுக்குப்பின்னால் ஒரு கொட்டில் இருககிறது அங்கே குதிரையைப் போட்டுவிட்டு உறங்கு யாரும தொற்தரவு செய்யமாட்டார்கள் குதிரைக்கும் தீனி போடுகிறேன் என்றார்.

மருதுபாண்டியருக்கு ராஜபோசனத்தை விட அந்தப்பழைய சோறும பண்பாடும் மிகவும் பெரிதாகத் தெரிந்தது. அந்த அம்மா தந்த ஓலைப் பாயை வாங்கிக் கொண்டு குடிசைக்குப்பின் பக்கம் போனார். குதிரையைக்கட்டினார் பாயை விரித்துப்படுத்துக் கொண்டார்.பக்கத்திலேயே குதிரைக்காரனும் படுத்துக்கொண்டான். அசந்து உறங்கினார்கள் கண் விழித்தபோது சூரியன் உச்சியில் இருந்தான் அந்தக் கூரை வீட்டடில் சாப்பிட்ட சாப்பாடும் உறங்கிய உறக்கமும் உடலிலும் மனதிலும் ஒரு புது உற்சாகத்தைக் கொடுத்தது.

நன்றியுடணர்வுடன் அந்த வயதான அம்மாவைப் பார்த்தார். அவர்காட்டிய அன்புக்கு இந்த உலகையே கொடுத்தாலும் ஈடாகாது என்று நினைத்தார். அம்மா உங்கள் வீட்டில் ஒரு எழுத்தாணி இருந்தால் கொண்டுவாருங்கள் என்றார். என்பிள்ளைகள் ஒரு விஷேசத்திற்காக வெளியூர் போயிருக்கின்றனர். அதெல்லாம் எங்கே வைத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை என்றார். "சரிபரவாயில்லை" என்று குதிரைக் காரணைக் கூப்பிட்டார்.

"இந்த வீட்டுக்கூரையிலிருந்து ஒரு பனை ஓலையும் பக்கத்துவேலியிலிருந்து ஒரு முள்ளையும் எடுத்துக்கொண்டுவா" என்றார். எடுத்துக்கெண்டுவந்தான் அந்தக்கிராமம் முழுவதும் அந்த அம்மாவுக்கே சேரவேண்டியது என்று எழுதிக்கொடுத்தார்.

முள்ளால் எழுதிய அந்த தர்மசாசனத்தை அவரிடம் கொடுத்து அம்மா !சிவகங்கை சமஸ்தான அதிகாரிகளிடம் இதை நீங்கள் கொடுத்தால் உங்களுக்கு ஏதாவது அனுகூலம் உண்டாகும் என்று கூறிவிடடு குதிரை மீதேறிப் போய்விட்டாா. ஊரிலிருந்து பிள்ளைகள் வந்ததும் இதை எடுத்துப் போய் சமஸ்தானத்தில் காட்ட வேண்டுமென்று அந்த அம்மா நினைத்தார். ஆனால் அதற்குள் பகைவர்கள் சமஸ்தானத்தைக் கைப்பற்றியதாகத் தகவல் வந்தது.

அதனபின் மருதுபாண்டியரை பகைவர்கள் சிறையில் அடைத்துவிட்டார்கள் அவருடைய கடைசிக்காலத்தில் பகைவரின் அதிகாரிகள் அவரிடம் கேட்டார்கள் 'உங்கள் கடைசி விருப்பம் என்ன சொல்லுங்கள்' என்று. அப்போது அவர் என்ன சொன்னார் தெரியுமா? நான் யார் யாருக்கு எந்தெந்த கிராமத்தை எழுதிக் கொடுத்திருககிறேனோ அதெல்லாம் அவரவர்க்குச் சொந்தமாக வேண்டும் அதுதான் என் பிரார்த்தனை வேறொன்றுமில்லை" என்றார்.

இதைக் கேட்டதும் அவரது விரோதிகளே ஒரு மாதிரி ஆகிவிட்டார்கள். அவருடைய நன்றியுணர்வுக்கு மரியாதை கொடுத்து அவரது இறுதி ஆசையை நிறைவேற்றினார்கள் மருதுபாண்டியர் கொடுத்த பொருட்கள் எல்லாம் உரியவர்களுக்கு வழங்கப்படுகிறது என்று கேள்விப் பட்டு இந்த அம்மா தன்னிட மிருந்த ஓலையைக் கொடுத்தனுப்பினார். அந்தக் கிராமம் அவருக்கே கிடைத்தது. அப்படிக் கிடைத்த கிராமந்தான் பழஞ்சோற்றுக் குருநாதனேந்தல்.

தன்வீட்டில் பழைய சோறு சாப்பிட்டது மருதுபாண்டியர் என்ற விடயமே அந்த அம்மாவுக்கு இப்போது தான் தெரிய வந்ததாம். கையில் கட்டுப்போட்டிருந்த நிலையிலும் கூரையில் இருந்து எடுத்தமுள்ளால் முகமலர்ச்சியுடன் அவர் எழுதிய காட்சி நினைவுக்கு வந்தது அந்த அம்மா சாகும்வரை அதைச் சொல்லிச் சொல்லி ஆச்சரியப்படுவாராம்.

ஒரு ஆள் இரவு நேரத்தில் வந்து ஐயா நான் வெளி யூர்க்காரன் இன்றிரவு மட்டும் பின்னால் உள்ள கொட்டிலில் படுததிருந்துவிட்டுக் காலையில் போ்ய் விடுகிறேன் என்றான். சரி என்றார் வீட்டுக்காரர் இவன் விடிவதற்குள் அங்கே கட்டியிருந்த குதிரையைத் திருடிக் கொண்டு அதன் மீதேறி தப்பித்துப் போய் விட்டான்.

காலையில் எழுந்துபார்த்தார் வீட்டுக்காரர் அதிர்ச்சியடைய வேண்டுமல்லவா அப்படி அடையவில்லை ஏன் சார் உங்கள் குதிரை காணாமல் போனது உங்களுக்கு வருத்தமாக இல்லையா? என்று கேட்டார்கள். இல்லை என்றார் ஏன் ? என்றார்கள். "காணாமல் போனது குதிரையாக இருந்தால்தானே சார் வருத்தபபடவேண்டும்... அது கழுதை சார் இருட்டில் அடையாளம் தெரியாமல் கொண்டுபோய் விட்டான் நானே அதை யார் தலையில் கட்டலாம் என்று பார்த்துக்கொண்டிருந்தேன்" என்கிறார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# அனைத்து மக்களின் உரிமைகளுக்கும் பாதுகாப்பு வழங்கப்படவேண்டும்

## கனேடிய தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய இலங்கை என்ற கட்டமைப்புக்குள் அனைத்து இன மக்களுக்கும் நியாயப்பூர்வமான உரிமைகள் அளிக்கப்படவேண்டும் என்று இலங்கைக்கான பிரதிகனேடியத் தூதுவர் ராகேல் டெட்லிங்டன் தெரிவித் துள்ளார்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற கனேடிய நாள் நிகழ்வில் உரையாற்றிய அவர் அங்கு மேலும் கூறுகையில்.

இணைத் தலைமை நாடுகள் நோர்வே மற்றும் கண்காணிப்புக்குழுவினருக்குப் பின்னாலும் குறிப்பாக வன்முறையை முடிவுக்குக் கொண்டுவர இலங்கையருக்குப் பின்னாலும் நாம் நிற்கிறோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அனைத்து பயங்கரவாத செயற்பாடுகள் மற்றும் வன்முறைகளை நிறுத்த வேண்டும். அமைதிப் பேச்சுக்களுக்கு மீண்டும் செல்ல வேண்டும்.

இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியாக தீர்வுகாண முடியாது மனித உயிர்கள் பலியாவதைத் தடுக்க விரைவில் அரசியல் தீர்வு காணப்படவேண்டும். வன்முறைகள் கைவிடப்படவேண்டும்.

அனைத்து வகையான வன்முறைகளையும் கனடா கண்டனம் செய்கிறது . யூன் 15 இல் பேசாலை தேவாலயத்தின் மீது நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதலையும் பேருந்து குண்டுவெடிப்பையும் நாம் வன்மையாகக் கண் டிக்கிறோம்.

ஆத்திரமூட்டல்களும் வன்முறையும் இருந்தபோதும் கூட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமைதி முயற்சிகளில் ஈடுபாட்டுடன் உள்ளார்.

அனைத்து மக்களினது உரிமைகளும் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படவேண்டும் ஐக்கிய இலங்கை என்ற கட்டமைப்புக்குள் அனைத்து இன மக்களுக்கும் நியாயபூர்வமான உரிமைகள் அளிக்கப்பட வேண்டும் என்றார் அவர். (து)

# கொட்டாஞ்சேனையில் கைதானவருக்கு ஜூலை 27ம் திகதி வரை விளக்கமறியல்

(கொழும்பு)

கொழும்பு கொட்டாஞ்சேனையில் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலி சந்தேக நபருக்கு மேஜர் ஜென ரல் பரமி குலதுங்க கொலை வழக்கில் தொடர்புள்ளதா என்பது பற்றி தற்போது விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டு வருவதாக கொழும்பு நீதிமன்றத்திற்கு கொட்டாஞ் சேனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தங்களுக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கு அமைய கொட்டாஞ் சேனை பெணடிக் மாவத்தையில் கைது செய்யப்பட்ட கொடவி ஜோன் பிள்ளை என்பவர் தாக்குதலுக்காக கொழும்பிற்கு வரும் தாக்குதலாளிகளுக்கு தங்குமிட வசதிகளை வழங்கியுள்ளதாகவும் கப்பம் பெறும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதாகவும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது என்றும் கொழும்பு நீதிபதி கிஹான் பிலப்பிட்டியவிற்குத் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சந்தேக நபரிடம் விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பன்னிப்பிட்டிய தாக்குதலாளிக்கு கொழும்பில் வசதிகளைச் செய்து கொடுத்தது இந்த சந்தேக நபர் தானா என்பதைக் கண்டறிவதற்கான விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முக்கிய பிரமுகர்களைக் கொலை செய்வதற்காக கொழும் பிற்கு வரும் தாக்குதலாளிகளுக்கு உதவி வழங்குதல் மற்றும் கப்பம் பெறல் ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேக நபரின் கையடக்கத் தொலைபேசியும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

அவரிடம் விசாரணைகளைத் தொடர்வதற்காக மேலும் ஒரு மாத காலம் அவரை தடுப்புக்காவலில் வைப்பதற்கு நீதிபதியிடம் பொலிஸார் அனுமதி கோரியுள்ளனர்.

இதனை ஏற்ற நீதிபதி ஜூலை மாதம் 27ஆம் திகதி வரை சந்தேக நபரை தடுப்புக்காவலில் வைக்க உத்தரவிட்டுள்ளதுடன் சந்தேக நபரின் வங்கி விவரம் மற்றும் தொலை பேசி விபரங்களை பொலிஸாருக்கு வழங்குமாறு குறித்த நிறுவனங்களுக்கு உத்தரவிட்டுள்ளார். (து)

# மத்தியஸ்தர் சபை அங்குரார்ப்பணம்

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை மத்தியஸ்தர் சபை அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த மாதம் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00மணிக்கு தெல்லிப்பளை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினர்களாக மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி ச. இளங்கோவன் ,தெல்லிப்பளை உதவி பிரதேச செயலர் சு. முரளீதரன் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பளை பிரதேசசெயலக நிர்வாக உத்தியோகத்தர் ப. இராஜகோபாலன், திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரன், உதவி பிரதேச செயலர் இ.கலைச்செல்வி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களாக தெல்லிப்பிளை பிரதேச செயலக பிரதம எழுதுநர் கு.சிவலிங்கம், தெல்லிப்பளை ப.நோ.கூ.சங்கப் பணிப்பாளர் சபை உறுப்பினர் க.விக்கினேஸ்வரர், இளைப்பாறிய உதவிக் கல்விப்பணிப்பாளர் மு.சிவராசரத்தினம், தெல்லிப்பளை பிரதேச செயலக அபிவிருத்தி உதவியாளர் அ.றெஜி னோல்ட்ராஜ், தெல்லிப்பளை பிரதேச செயக உதவி சிறுவர் உரிமை மேம்பாட்டு அலுவலர் க.யோகேஸ்வரி ,இளைப்பாறிய அதிபர் க. திருநாவுக்கரசு, யா/ அளவெட்டி வடக்கு சீனன் கலட்டி ஞானோதயா வித்தியாலய அதிபர் ந. அமிர்தலிங்கம், அளவெட்டி விவசாய சம்மேளன தலைவர் ந.கமலநாதன், அளவெட்டி மேற்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தலைவி திருமதி சி.செல்வராணி, தெல்லிப்பளை பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் க.பாலறூபி, தெல்லிப்பளை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் மா. அருள் சந்திரன், தெல்லிப்பளை பிரதேச செயலக சமுர்த்தி வலய உதவி முகாமையாளர் இ. தர்மகுலசிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (து-7)

# நால்வர் கடத்தப்பட்டனர்

(அம்பாறை)

அம்பாறை பனங்காடு கோலாவில் கிராமத்தில் இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணைக் இராணுவக் குழுவினரால் தமிழ் இளைஞர்கள் நால்வர் கடத்திச் செல்லப் பட்டுள்ளனர்.

பனங்காடு கோலாவில் கிராமங்களில் கடந்த வியாழக்கிழமை இரவு வீடு, வீடாகச் சென்று இளைஞர்கள் யாராவது உள்ளார்களா என்று துணை இராணுவக்குழுவினர் தேடியுள்ளனர்.

இந்தத்தேடுதல் நடவடிக்கையின் போது நான்கு இளைஞர்களைக் கடத்திச் சென்றுள்ள்னர்.

மேலும் முருகன் இராமலிங்கன் என்பவருடைய வீட்டில் அத்துமீறி துழைந்த துணை இராணுவக் குழுவினர் 25 ஆயிரம் ரூபாய் பணத்தினையும் பல ஆயி ரம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகளையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். (து)

# இலங்கையில் முதலீடு செய்ய லண்டனில் விசேட பேச்சு!

(கொழும்பு)

இலங்கையில் அதிக முதலீடு செய்வது தொடர்பான விசேட பேச்சுவார்த்தை லண்டனில் நடைபெற்றுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தையில் 150இற்கும் மேற்பட்ட உயர் மட்ட நிறுவனங்களின் முதலீட்டாளர்கள் கலந்து கொண்டதாக அமைச்சர் ரோகித்த போகல்லாகம தெரிவித்துள்ளார்.

`இலங்கையில் முதலீடு செய்வோரில் பிரிட்டன் மூன்றாவது இடத்தை வகிப்பதாகவும் பிரிட்டன் முதலீட்டா ளர்கள் 23 பில்லியன் முதலீட்டில் 126 நிறுவணங்களை இலங்கையில் நிறுவியிருப்பதாகவும் தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (கு-9)

# உயர் தரத்தில் சித்தியடையாத மாணவர்களுக்கு தொலைக்கல்வி

(கொழும்பு)

உயர் தரத்தில் சித்தியடையத் தவறியவர்களுக்கு தொலைக்கல்வி நவீன மயப்படுத்தும் திட்டம் அரிய வாய்ப்பாகும் என்று கல்வியமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த தெரிவித்தார்.

பாரம்பரிய பல்கலைக்கழகங்களில் போதிய வசதிகளில்லாததால் வரையறுக்கப்பட்ட மாணவர்களே வருடா வரு டம் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகுகிறார்கள்.

உயர்தரம் சித்தியடைவோரில் 7.5 வீதமானனோர் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறுகின்றனர் .அவர்களுள் 50 வீதத்தினரையே பல்கலைக்கழகங்கள் உள்வாங்குகின்றனர்.

ஏனைய மாணவர்கள் உயர் கல்வி கற்க வாய்ப்பில்லாமல் அலையும் நிலையை இம்முறைமை நீக்கியுள்ளது. குறிப்பாக கிராமப்புற மாணவர்களுக்கு இது வரப்பிரசாதமாகும் என அமைச்சர் மேலும் கூறினார்.

அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த மேலும் கூறுகையில்;

தொலைக்கல்வி நிகழ்ச்சித் திட்டத்தின் தொழில் நுட்ப வியூகங்களை நவீனமயப்படுத்துவதன் மூலம் இரண்டாம் நிலைக்கல்விக்கு பிந்திய கல்வி நிலையை அபிவிருத்தி செய்ய முடியும்.

அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்கள் இணைவதன் மூலம் உயர் தரத்தில் தவறிய மாணவர்களுக்கு வாய்ப்பளிக்க முடியும் என்றார். (க-7)

# ஆண்டவனை நினைத்து வாழ்தலே பக்குவம் பெறும் வழியாகும் !

ஒரு ஓவியத்தை வரைந்து அழகு பார்க்கின்றோம் வேறு சிலரும் வந்து அவ்வோவியத்தை அழகு பார்க்கின்றனர். ஆனால் அவர்களால் அவ்வோவியத் தின் அழகைப் பாராட்ட மனமில்லை. அங்கிருந்த மைகளை எடுத்து அந்த ஓவியத்தின் மேல் ஊற்றி விடு கின்றனர். இப்பொழுது அந்த ஓவியம் அழகிழந்து அலங்கோல மாகக் காணப்படுகின்றது. இத னைப் பார்த்தபோது அந்த ஓவியனின் மனம் எவ்வளவு வேதனையில் துடித்திருக்கும்.

இவ்வாறு தான் சாவைக் கட வுள் உண்டாக்கவில்லை. வாழ் வோரின் அழிவில் அவர் மகிழ்வதி ல்லை. இருக்க வேண்டும் என்ப தற் காகவே அவர் அனைத்தையும் படைத்தார். உலகின் உயிர்கள் யாவும் நலம் பயப்பவை.

(சால.ஞானம் 1:13-14) கடவுள் மனிதர்களை அழியாமைக்கென் றே படைத்தார். அதுவே இறை விருப் பமாக இருந்தது.

### கொடுப்பதே அன்பு

கொடுத்தாருக்கு குறைவில்லை என்பார்கள். அன்பு கொடுத்தலின் மூலமே வளர்கின்றது. பணமோ, நேரமோ, மதிப்போ, மன்னிப் போ விட்டுக் கொடுப்போ, தியாக மோ, கொடையோ எல்லாமே அன்பை வளர்க்கும் கருவிகளா கும்.

இயேசு இறைமகனாகச் செல்வ ராக இருந்தும் எமக்காகவே அனை த் தையும் துறந்து ஏழையிலும் ஏழை யானவர். எல்லா மக்களும் சம நிலை அடைய வேண்டு மென் றே இயேசு இப்படிச் செய்தார்.

இருப்பதைக் கொடுக்கும் போது தான் ஏழை மகிழ்ச்சியடைகின் றான். சமநிலை வாழ்வு உதயமா கின்றது. எல்லோரும் இவ்வுல கில் ஓடியோடிச் சேர்த்தும் எதனையும் இறக்கும் போது கொண்டு செல் ல முடிவதில்லை.

எனவே அவ்வாறு சேர்ப்பதைப் பிறரோடு பகிர்ந்துகொள்ளாவிட் டால் பயனுமில்லை. மறை நூலில்

## பரமபிதாகாட்டும் பாதை

எழுதியுள்ளவாறு ''மிகுதியாகச் சேர்த்தவனுக்கு மிச்சம் எதுவுமில் லை. குறைவாகச் சேர்த்தவனுக் கு எதுவும் குறைவுபடவுமில்லை'' (2.கொரி-8:15)

### சிறிய நற்செயலின் விளைவு


''நல்ல மனிதனின் வாழ்வின் முக்கியமான பகுதி யாரும் கவனிக் காத நற்செயல்களில் அடங்கு கிறது'' என்று வோர்ட்ஸ் என்ற அறிஞர் குறிப்பிடுகின்றார். ஒருநா ளின் பகல் பொழுதாகிய பன்னி ரெண்டு மணித்தியாலங்களில் பத்து நிமிடங்களாவது ஒரு நல்ல செயலைச் செய்வோமாக இருந் தால் இருபத்திநான்கு மணித் தியா லங்களும் நற்செயல் நடக்கும்.

ஒவ்வொரு நாளும் உன் னால் இயன்ற நற்காரியம் செய். மற்ற தைக் கடவுள் பார்த்துக் கொள் வார். மகத்துவ மானது உயிர். மாண்புநிறைந்தது உயிர், பகைத் திட வல்ல உயிர், சமத்துவம் பேண வே உயிர். யாயீர் என்ற நூற்று வர் தலைவனின் மகள் இறந் தும் உயிர்பெற்றாள். தந்தை இயேசு விலே நம்பிக்கைகொண்டு அதனை வெளிப்படுத்தி இயேசு விடம் வேண்டிக் கொண்டான். இயேசு வும் இறந்துபோன சிறுமியை உயிர்ப்பித்து விசுவாசத்தின் வல்ல மையை எடுத்துக் காட் டினார்.

### நம்பிக்கை வாழ்வு

நம்பிக்கையீனங்களே உயிர் களைப் பலி எடுக்கின்றது. மனித னின் அகந்தையே இயற்கையை யும் சீரவைக்கின்றது. அயலவனை மதியாதபோது ஆண்டவனால் தண்டனை வருகின்றது. இறை வன் நினைத்தால் ஒரு நொடிப் பொழுது போதும் அழிக்கவும், புதியதைப் பிறப்பிக்கவும் -ஆனால் மனிதன் இதனை அடிக்கடி மறந்து விடுகின்றான்.

பக்தி இல்லை, பண்பாடு இல் லை, கீழ்ப்படிதலில்லை, அன் பில்லை, அரவணைப்பில்லை, உறவில்லை இதன் தாக்கமே பகைமை வரக்காரணம். இறைவ னை விட்டு விலகி விலகிச் செல்லும் போது ஏளனமே தலை தூக்கும்.



### அன்ரனிபீற்றர்

இறைவனை நோக்கி நெருங்கி நெருங்கிச் செல்ல மேற் சொன்ன இல்லாத நிலைகள் எல்லாம் இருப்பது தெரிய வரும். ஆண்ட வனை மறந்து வாழா மல் அனு தினம் அவனை நினைந்து வாழ்ந் திடும் பக்குவம் பெறுவோம். அருள் பெறுவோம். □

## விளையாட்டு விழா

(பொன்னாலை)

அராலி மேற்கு '' மலரும் மலர் கள்'' முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு விழா இன்று ஞாயிற் றுக்கிழமை பி.ப 2மணிக்கு குறித்த முன்பள்ளி மைதானத்தில் நடை பெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக சச்சியா இரும்பகத்தின் உரிமை யாளர் சி.சச்சிதானந்தமும், கௌ ரவ விருந்தினர்களாக வட்டு. மத்திய கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர் சி.சிவஞானபோதனும், சிறிக ணேச வித்தியாசாலையின் அதிபர் க.சந்திரசேகரனும் கலந்துகொள் ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக அராலி மேற்கு கிராம உத்தியோகத்தர் சி. பவானந்தனும், சனசமூக அபிவி ருத்தி உத்தியோகத்தர் த.கிருபாக ரனும், வலிகாமம் மேற்கு முன் பள்ளி இணைப்பாளர் ந.நிரஞ்ச னாவும், வலிகாமம் மேற்கு முன் பள்ளி ஆசிரியர் சங்கத் தலைவி இ.ஜீவாவும் கலந்துகொள்ளவுள் ளார்கள். (க-49)

# புலிகள் பற்றிய கமலாதாசின் கருத்தை வரவேற்கிறார் ஆய்வாளர் பரணி

உலகில்தனக்குப் பிடித்த மிகச் சிறந்த தமிழர் பிரபாகரன் என்று உலகப் புகழ்பெற்ற இந்தியப் பெண் எழுத்தாளரும் உலகின் முக்கியமான பெண்ணிய சிந்தனை யாளர்களில் ஒருவருமான மாதவிக் குட்டி என்று அறியப்படும் கமலா தாஸ் தெரிவித்துள்ளமை மிகவும் முக்கியமானது என்று ஆய்வாளர் பரணி தெரிவித்துள்ளார்.

மாதவிக்குட்டியின் இந்தக் கருத்துக் குறித்து மேலும் கூறிய பிரான்சிலுள்ள ஆய்வாளரும் விமர்சகருமான பரணி மிக முக்கிய மான கால கட்டத்தில் மாதவிக் குட்டியிடமிருந்து இந்தக் கருத்து வெளிவந்திருக்கிறது.

ஈழப் போராட்டம் தொடர்பான இந்திய அரசின் நிலைப்பாடு தமிழர் களுக்கு சாதகமாக மாறிவரும் நல்ல சூழலில் விடுதலைப் புலிக ளின் தலைவர் குறித்தும் அவர்க ளின் நியாயமான போராட்டம் குறித்தும் வரலாற்று முக்கியத்து வம் வாய்ந்த கருத்துக்களை வெளி யிட்டிருக்கிறார்.

இது இந்திய அரசின் தற்போ தைய நிலைப்பாட்டிற்கு வலுச்சேர்ப் பதாக அமையும் என்று நிச்சய மாகக் கூறலாம்.

ஒரு புத்திஜீவியாக, எழுத்தாள ராக, பெண்ணிய சிந்தனையா ளராக இந்திய அரசியல் மட்டத்தில் அவரது கருத்துக்கள் மிக முக்கிய மானவை.

அண்மைக்காலமாக இந்திய உபகண்டத்திலிருந்து ஈழத்தமிழ ரின் அரசியல் நிலைப்பாடு தொடர் பாக பல மட்டங்களிலிருந்தும் நல்ல அறிகுறிகளும் சமிக்ஞைகளும் வெளிவரத் தொடங்கியிருக்கின்றன. அதன் தொடர்ச்சியாகவே மாதவிக் குட்டியின் கருத்தையும் எடுத்துக் கொள்ளலாம். மொத்தத்தில் வர லாறு அதன் தீர்ப்பை எழுதி தயாரா கிக் கொண்டிருக்கிறது என்றார். ஆனந்தவிகடன் இதழுக்கு வழங்கி யிருந்த செவ்வியில்,

எனக்கு விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனை மிகவும் பிடிக்கும். இலங்கையில் நான் தங்கியிருந்தபோது அந்த அமைப்புடன் எனக்கு நிறைய பழக்கம் இருந்தது.

பிரபாகரனை ஒரு தீவிரவாதி யாக இந்தியா சித்திரிப்பது தவறு. விடுதலைப் போராளிகளுக்கும் சுயநலங்களுக்காச் செயல்படும் தீவிரவாதிகளுக்கும் நிறைய வேறு பாடுகள் இருக்கின் றன. வன்முறை யை விடுதலைப் புலிகள் கையில் எடுத்திருக்கிறார்கள் என்று குற்றம் சாட்டுவதை விட ஏன் எடுத் தார்கள் என்ற காரணத்தை ஆராய்ந்து பார்க்க வேண்டும் அதுதான் தீர்வுக் கான ஒரே வழி என்று கமலாதாஸ் கூறியிருந்தார். (கு)

## இராசி பலன்

**02.07.2006**
**(ஆனி 18, ஞாயிற்றுக்கிழமை)**
**சப்தமி முழுவதும்**
**உத்தரம் பின்னிரவு 5.49 மணிவரை**
**இராகுகாலம் 4.26-5.56மணிவரை**
**சுபநேரம் 8.56-10.26 மணிவரை**
**மடுமாதா திருநாள்**

| | |
|---|---|
| மேடம் | சுபநிகழ்வு, தடைப்பட்ட காரியம் கைகூடும், போசனசுகம், பெரியோர் உதவி. |
| இடபம் | புத்திரரால் கவலை, திடீர் நன்மை, தொழில் சிந்தை, முயற்சி தாமதம். |
| மிதுனம் | உஷ்ண ரோகம், உறவினர் சந்திப்பு, மனச்சஞ்சலம், புதிய தகவல். |
| கடகம் | சகோதரர் உதவி, சுபநிகழ்வு, எடுத்த கருமங்கள் கைகூடும், பிரயாண சுகம். |
| சிங்கம் | கடின வார்த்தை, முயற்சி தாமதம், பெரியோர் ஆதரவு, பணவிரயம். |
| கன்னி | வாக்குமேன்மை, சொத்துக்களால் நன்மை, குடும்ப சுகம், முயற்சி கைகூடும். |
| துலாம் | சயன சுகக் குறைவு, பித்தரோகம், முயற்சி தாமதம், சுபசெலவு. |
| விருச்சிகம் | குடும்ப சுகம், பெருமையடைதல், காரிய நன்மை, பொருள் சேர்க்கை. |
| தனுசு | கடின உழைப்பு, தூரதேசச் செய்தி, இஷ்ட சித்தி, நண்பர்கள் உதவி. |
| மகரம் | புதிய திட்டமிடல், திடீர்பயணம், காரிய தாமதம், வீண் பயம். |
| கும்பம் | மனக் கவலை, பிரயாண பயம், காரிய தாமதம், போசன்சுகம். |
| மீனம் | உறவினர் வருகை, நல்ல முயற்சி, விருந்துபசாரம், தெய்வசிந்தை |

- வளவன்

# பாட்டாளி வர்க்க புதிய ஜனநாயக சங்கம் பதிவு

(யாழ்ப்பாணம்)

பெருந்தோட்டத் தொழிற்துறையில் வேலை செய் வோருக்கும் தனியார், விவசாயம், கைத்தொழில், வர்த்தம், தொழில்நுட்பம் போன்ற துறைகளிலும் மற்றும் கடைகள், காரியாலயங்களில் வேலை செய் வோருக்குமென பாட்டாளி வர்க்க புதிய ஜனநாயக சங் கம் ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

இச் சங்கத்தின் தலைவராக சட்டத் தரணி இ.தம்பை யாவும், செயலாளராக எம்.சத்தியமூர்த்தியும், பொரு ளாளராக கே.சுதர்சனும், பிரதி தலைவராக கே.சிவரா ஜாவும், உதவி செயலாளராக என். கலைச் செல்வி யும், உதவி பொருளாளராக எம்.நமசிவாயமும் மற்றும் உபதலைவர்களாக எஸ்.வீ. சண் முகராஜா, டி.கிருஸ்ணசாமி, என்.எஸ்.நாராயணசாமி, டி.வேத நாயகம், எம்.சிவராஜ் ஆகியோரும்,

செயற்குழு உறுப்பினர்களாக கே.முன்னீஸ்வரன், எஸ்.குமாரவேல், கே.பாலகிருஸ்ணன் ஆகியோ ரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (கு)

## ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான கற்பித்தல் சாதன உருவாக்கப் போட்டி -2006

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள ஆரம்புக் கல்வி ஆசிரியர் களிடையே கற்பித்தல் சாதனம் உருவாக்கும் திறனை ஏற்படுத்துவதன் மூலம் மாணவர்களின் கல்வி முன் னேற்றத்திற்கு வழிசெய்யும் ஆசிரிய வாண்மைய உயர்த்தும் நோக்குடன் யாழ்ப்பாணம் தேசிய கல்வி யியற் கல்லூரியின் கற்றல் கற்பித்தல் உள்ளீட்டு மூல வளநிலையம் இம்முறையும் கற்பித்தல் சாதனங்களை உருவாக்கும் போட்டியை நடாத்தத் தீர்மானித்துள் ளது.

யாழ். மாவட்டத்தில் சேவையாற்றும் அனைத்து ஆரம்பக்கல்வி ஆசிரியர்களும் இப்போட்டியில் பங்கு கொள்ள முடியும்.

இப்போட்டியில் முதலாம், இரண்டாம், மூன் றாம் இடத்தைப் பெறும் ஆசிரியர்களுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

மேலும் வலய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெறும் ஆசிரியர்களுக்கு சிறப்புக் கேடயமும், சான்றிதழ்க ளும் வழங்கப்படும். அத்தோடு 2ஆம், 3ஆம் இடத்தைப் பெறும் ஆசிரியர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப் படும். மேலும் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இவ்வாறு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடா திபதி தெரிவித்துள்ளார். (கு)

# யாழ்.வலய அரிமாக் கழகத்தின் புதிய நிர்வாகிகள் பதவியேற்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலய அரிமாக் கழகத் தின் 2006/2007 ஆம் ஆண்டுக்கு ரிய புதிய நிர்வாகிகளின் பதவியேற்பு வைபவம் இன்று காலை 10.30 மணிக்கு யாழ். புனித பத்திரிசியார் வீதியில் அமைந்துள்ள லொயலாஸ் திருமண மண்டபத்தில்லயன்பி. ஆர். றஞ்சன் தலைமையில் நடைபெறவு ள்ளது. இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக லயன் ரி. அன்பானந் தன் கலந்து கொள்ளவுள்ளார்.

யாழ்.வலய அரிமாக் கழகத்தின் புதிய தலைவராக லயன் டி.எஸ். லெனாட், செயலாளராக லயன் பி.செந்தில்செல்வன், பொருளா ள ராக லயன் கே. ஜெயந்தன் பதவி யேற்கவுள்ளனர்.

யாழ். அரிமாக் கழகத்திலிருந்து 2006/2007 ஆம் ஆண்டுக் கான மாவட்ட 306 B1 ஆளுநர் சபைக்கு லயன் ரி. அன்பானந் தன் பிராந்தியத் தலைவராகவும், லயன் பி.ஆர். றஞ்சன் வலயத் தலைவராகவும், லயன் ஜே.முத்துக் குமாரசாமி மாவட்டத் தலைவரா கவும் தெரிவாகியுள்ளனர்.

இதேவேளை, கடந்த ஆண் டும் அரிமாக் கழகத்திலிருந்து ஆளுநர் சபைக்கு மூன்றுபேர் தெரிவாகியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (கு)


**அருள் மிகு சுன்னாகம் மயிலணி**
**கந்த சுவாமி கோவில் மஹோற்சவம்**



**12 ஆம் நாள் 02.07.2006**
**(தீர்த்தம், கொடியிறக்கத் திருவிழா)**



**வண்ணமாய் அருளிடுவாய்**

தண்ணொளி உடையவனே தரணியை ஆள்பவனே
விண்ணவர் துயரை வேல்கொண்டு தீர்த்தவனே
திண்ணமாய் மனமுருகி தொழுதிடும் அடியார்க்கு
வண்ணமாய் அருளிடுவாய் மயிலணி வேலவனே

*குகதாசசர்மா சிவகுமார்*

# ஆனந்தத்தை அள்ளித் தரும்



தில்லையிலே திருநடனமிடுகின்ற கனக சபையான் சிற்றம்பலத்தான் நடராஜனின் ஆனி உத்தர தரிசன நன்னாள் இன்றாகும். சிதம்பரத்திலே இன்று அரனவன் ஆனந்தத் தாண்டவமிடும் கோலாகலக் காட்சி காணக் கண்கோடி வேண்டும். ஆடி ஆடி அசைந்து வருகின்ற அம்பலத்தானின் திருநடனம் காண்பதற்கு இன்று அதிகாலையிலேயே அடியார் பெருமக்கள் கூடிவிடுவார்கள்.

பக்தர் குழாம் சூழ்ந்துவர பரமசிவனும் பார்வதியும் அருள்நடமிடும் காட்சி ஆனந்தத்தை அள்ளித்தரும் ஓர் அரிய நிகழ்வாகும்.

நடராஜப் பெருமானின் தரிசனம் காண்பதற்கு நாம் பூர்வ ஜென்ம புண்ணியஞ் செய்திருக்க வேண்டும். இன்றைய ஆனி உத்தரத்தில் சிதம்பரத்திலே தீர்த்தத் திருவிழா. அதிகாலை நான்கு மணிக்கு அம்பலத் தரசனுக்கும் அம்பிகைக்கும் தேன், பால், இளநீர், பஞ்சாமிர்தம் முதலியவற்றால் அபிஷேகம் நடைபெறும். இந்த அபிஷேகத்தைக் கண்டு களிப்பதற்காகக் கனக களிக்கும் இந்த ஆனி உத்தர தரிசனம் மிகவும் சிறப்பும் மகிமையும் பொருந்தியது.

'கோயில்' என்று சிறப்பாக அழைக்கப் பெறும் சிதம்பரத் திருத்தலத்தில், ஈழத்துக் காரைநகர் சிவன் கோயிலில், நல்லூர் சிவன் கோயிலில் இந்த அற்புத நடனத்தை அடியார்கள் அகங்குளிரக் கண்டுகளிப்பார்கள்.

இன்றைய ஆனி உத்தர நன்னாளில் விரதமிருந்து அடியவர்களுக்கு அமுதளித்து அன்னதானஞ் செய்தால் புத்திர பாக்கியம் கிடைக்கும் என்று ஆன்றோர் கூறுகின்றனர். அத்துடன் சிவ நாமாவளிகளைத் தோத்திரஞ் செய்து சிவபெருமானைப் பாடிப் பரவிப் பணிந்தேத்தினால்

## ஆனி உத்தர தரிசனம்

சபையிலே கூடியிருக்கும் அடியார் திருக்கூட்டம் அலைமோதுகின்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

*குனித்த புருவமும் கொவ்வைச்*
*செவ்வாயிற் குமிண் சிரிப்பும்*
*பனித்த சடையும் பவளம் போல் மேனியிற்*
*பால் வெண்ணீறும்*
*இனித்த முடையஎடுத்த பொற்பாதமும்*
*காணப்பெற்றால்*
*மனித்தப் பிறவியும் வேண்டுவதே இம்*
*மாநிலத்தே*

என்ற பாடலின் மகத்துவம் இன்றுதான் புலப்படுகிறது.

முப்பத்து முக்கோடி தேவர்களும் நாற்பத்தொண்ணாயிரம் ரிஷிகளும் கண்டு இம்மையிலும் மறுமையிலும் அம்மையிலும் அருள் பெறலாம் என்றும் கூறப்படுகின்றது.

ஆகவே சைவ அடியார்களாகிய நாம் அனைவரும் அருட் பொது நடமிடும் ஆனந்தத் தாண்டவன் தரிசனம் கண்டு, எல்லையில்லாத அருட் பெருங்கடலில் குளித்து

**நடராஜபக்தன்**

தில்லை நடராஜன் சிவகாமி நேசனின் திருவருளுக்குப் பாத்திரமாகி

அவனருளாலே அவன்தாள் வணங்கி ஆனந்தப் பெருவாழ்வு வாழ அவனருளையே நாடி நிற்போமாக.

## வீதி திருத்தப்படவில்லை பயணிகள் சிரமம்!

(சில்லாலை)

சில்லாலை வடக்கு மூன்றாம் வீதி எனக் குறிப்பிடப்படும் பிரதான வீதி திருத்தப் படாமல் குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது.

இதனால் இவ்வீதியால் பயணம் செய்யும் மக்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர். வாகனங்களைச் செலுத்த இயலாத அளவிற்கு இவ்வீதி பாதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பண்டத்தரிப்புப் பட்டின சபை, மானிப்பாய் மாநகரசபை போன்றவற்றிற்கு அப்பகுதி மக்கள் கையொப்பமிட்ட மகஜர் ஒன்றினை அண்மையில் கையளித்திருந்தும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த-58)

## திருநாள் திருப்பலி

(சில்லாலை)

'மருதமடு' அன்னையின் திருநாள் திருப்பலி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொரூப பவனியும் இடம்பெறவுள்ளது.

தற்போதைய அசாதாரண சூழ்நிலை காரணமாக இம்முறை இத்திருத்தலத்திற்கு விஜயம் செய்யும் பக்தர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருப்பதாகத் தெரியவருகிறது. (த-58)

# தமிழர்களின் போராட்டத்திற்கு தமிழக அரசு உதவ வேண்டும்

## - கேணல் சூசை

தமிழர்களின் போராட்டத்திற்கு தமிழகம் உதவ வேண்டுமென கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை தெரிவித்துள்ளார்.

தமிழக வார இதழான நக்கீரனுக்கு மின்னஞ்சல் மூலம் தனது கருத்துக்களை கேணல் சூசை தெரிவித்துள்ளார்.

எமது போராட்டத்திற்கு எந்த நாடும் பக்கபலமாக இருக்கவில்லை. இந்த நிலையில் போராட்டத்தின் பொருளாதாரம் மக்களாகும்.

அந்த மக்களின் பிரதான தொழில் மீன்பிடி என்ற வகையில் அரசாங்கத்தினால் முடக்கி வைக்கப்பட்டுள்ள மக்களின் மீன்பிடிப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கிலேயே எமது நடவடிக்கை அமைந்துள்ளது.

கருணா குழுவினர் பலாத்காரமாக ஆயுதப் பயிற்சி வழங்குவதை தடுக்க அரசாங்கம் முன்வரவில்லை. இந்த நிலையிலேயே எமது அமைப்பு மக்களுக்கு பாதுகாப்புப் பயிற்சிகளை வழங்கி வருகின்றது.

கெப்பிற்றிக்கொல்லாவில் சிங்கள மக்கள் கொல்லப்பட்டமைக்கு நாம் காரணமில்லை. எமது இலக்கு சிங்கள மக்கள் அல்ல.

இந்தியா, இலங்கைக்கு போர் கப்பல்களை வழங்கி வருகின்றது. இதனை விடுத்து இந்தியா ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபட்டால் அகதிகள் பிரச்சினை இல்லாமல் போய்விடும்.

எம்.ஜி.ராமச்சந்திரனுக்கு பின்னர் தமிழக முதல்வர்களாக பதவியேற்றவர்களுடன் உறவுகள் சீரற்றிருந்த போதிலும் தற்போது தமிழகத்தின் ஆதரவு இலங்கைத் தமிழர்களுக்கு ஆறுதலைத் தருவதாகவும் சூசை மேலும் தெரிவித்துள்ளார். (த-9)

# அனைத்துக் கட்சிக் கூட்டத்தை மாற்றியமைக்குக

தென்னிலங்கையின் அனைத்துக் கட்சிக் கூட்டத்தை மாற்றியமைக்க வேண்டும் என்று அகில இலங்கை தமிழர் ஐக்கிய முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுகுறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் கே.விக்னேஸ்வரன் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அதில் தென்னி லங்கையின் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தமிழ் மற்றும் முஸ்லிம் களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளும் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

புதிய அரசியல் யாப்பு உருவாக்கப்படும் நிலையில் தமிழ் மற்றும் முஸ்லிம்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளும் இணைத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

புதிய அரசியல் யாப்பு உருவாக்கப்படும் நிலையில் தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளை உள்ளடக்கியதாக அனைத்துக் கட்சி கூட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று அவர் அக்கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார். (த)



நொறாட் நிதியுதவியுடன் புனரமைக்கப்படும் ஆரியகுளம்.

(படம்: திலீவின்பன்)

## மருதமடுச் செபமாலை மாதாவின் திருநாளையொட்டி இக்கவிதை வெளியாகிறது

### ஈழவளநாட்டின் இணையில்லாத நாயகியே!

வேழாங்களும் வேங்கைகளும் வாழுங்கானில்
காரிருளிற் குமுறும் மழையில் கட்டிளம்
காளையெனப் பரதவிக்கின்றேன்!
தாளங்கள் தவறாமல் நடனமிடும் கணிகையின்
கழல்களென அம்மழையிருளில் நடுங்கிடும் மந்தியானேன்!
ஆழமிகும் ஆழியும் அடிவானும் சேர்ந்திடிக்கும் மின்னல் புயலில்
ஓடத்தின் மாலுமியானேன்!
ஆளப் பிறந்தவர்கள் ஆட்சியின் மாட்சிமைப் பிதற்றல்களையும் ஓர் கணம்...!
பாளை சிதறும் சிரிப்புப் பல்லழகைப் பாவினால் வடிக்க
வுங்கள் பகரவுயர்வல்லமை ஈந்ததை நினைத்தழுகின்றேன்!
வாழை மடலுடலழகு வனப்பொடு திரளவே – பாத்திமா பதியில்
ஏழைச் சிறார்களை அணைத்ததை நினைத்தழுகின்றேன்!
மீளாத்துயர்களாம் வறுமை, பிணி உயிர்ப்பயமெமை வதைபுரிய
வேளாங்கண்ணியில் வெள்ளமெனப் பால்பொங்கியதை நினைத்தழுகின்றேன்!
தாளைமலர்க் கவின் பேழையுறையழகே! தயாபரியே! தாயே!
ஏழையான் எதை ஏங்கியழுவேனம்மா!
வாழவைக்கும் தெய்வீக நாயகியே! – உமது அருள்
வன்கரடிவேங்கை மானுறையும் மடுப்பதியில்
சோழவளப் பொன்பொழியும் பொய்கையாகப் பொங்குவதை நினைத்தழுகின்றேன்!
நாளைய நம் தமிழர் நல் வாழ்வுக்கே விடிவிளக்கு ஏற்றி வைப்பாய்!
ஈழ வள நாட்டின் இணையில்லா இளவரசியே!
எனை ஆளும் மருதமடுச் செபமாலை நாயகியே!

*முகமாலைக்கவி: வில்சன்*

## இன்று கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் கொடியேற்றம்

### கொடி இன்று ஏறுது


அச்சம் நீக்கிட அவலம் போக்கிட
வெள்ளெருவையான் கொடி இன்று ஏறுது
அன்பு மலர்ந்திட ஆணவம் ஒழிந்திட
தொப்பையப்பனின் கொடி இன்று ஏறுது
சாதக வாழ்வுதரும் மோதகப் பிரியனின்
வேதனை நீக்கிடும் கொடி இன்று ஏறுது
வெள்ளெருக்கம் பந்தலிலே கோயில்கொண்ட
வேழமுகன் விநாயகனின் கொடி இன்று ஏறுது

*மு.விக்னேஸ்வரன்*
*கோப்பாய்.*

# கர்மவீரர் காமராஜர்

## மீள்பார்வை 15

முருக-தனுஷ்கோடி



*பெற்ற மனம் பித்து–பிள்ளை மனம் கல்லு*

பத்துப் பெண்கள் அவர் இருந்த பெஞ்சுக்குப் பின் பக்கத்தில் வந்து நின்றுகொண்டே பிரயாணம் செய்தார்கள். அவர்களால் பேசாமல் இருக்க முடியாதல்லவா? குடும்ப விஷயங்கள் கல்யாண முயற்சிகள் பெண் மாப்பிள்ளை வீட்டாரைப் பற்றி விமர்சனங்கள் கல்யாண வைபவங்களின் சிறப்பு, ஆடை அணிகளைப் பற்றிய வர்ணனைகள் கணவன் மனைவியாகி அடுத்த ஆண்டிலேயே குழந்தையைப் பெறப் போகும் இல்லறப் பெருமைகள் ஆகியவைதாம் பேச்சுக்கு ஆதாரங்கள்!.

கப்பலூர் தாண்டித் திருமங்கலத்தில் வண்டி நின்ற போது தான் அவர்கள் பேச்சின் சாராம்சத்தை நாயுடுவால் ஊகிக்க முடிந்தது. ஓடிக்கொண்டிருக்கும் வண்டியின் சத்தம் நின்றவுடன் இவர்கள் பேசும் தொனியும் குறைந்தது.

ஒருவர் சொன்னார்.

அத்தையை நினைத்தால்தான் நமக்குக் கஷ்டமாக இருக்கிறது பாவம் நாலுபேரைப் போல என்ன சுகத்தை சந்தோஷத்தைக் கண்டார்கள்? ஆளும் பேருமில்லாமல் பெண் கொடுப்பாரில்லாமல் ஒரு வழியுமில்லாமல் இருந்தால் விதிவசம்! அப்படி இருக்கிறவர்கள் கூட வீடும் குடித் தனமாய் இருப்பதைப் பார்க்கிறோம். எல்லாம் இருந்தும் வயதான காலத்தில் மகனைப் பார்த்து ஒரு மகளைப்பார்த்து, பிள்ளைகளைப் பார்த்து நல்லது பொல்லாததை நாலுபேரைப் போல அனுபவிக்கக் கொடுத்து வைக்கவில்லையே என்றுதான் அத்தைக்கு ஒரே ஏக்கம். வேறென்ன குறைச்சல்? யாராயிருந்தாலும் எப்படி ஆசைப்படாமல் இருக்க முடியும் ?அத்தைதான் எல்லாம் அடக்கிக் கொண்டு மனது உருகுகிறார்கள்.

வண்டி புறப்பட்டது பேசும் தொனியும் உயர்ந்தது. அடுத்தவர் தொடர்ந்தார். எத்தனையோபேர் இவர் கள் மகனைப் போலக் காங்கிரஸ்கார்ரர்கள் இல்லை? இப்படியா பெற்ற தாயை நினைக்காமல் வீடும் குடித்தனமுமாயிராமல் பரதேசியாகத் திரிகிறார்கள்? என்னமோ இவர்கள் செய்த தவம்.

மற்றொருவர்:

பிறகென்ன இந்த வயதில் பேரனைப் பார்த்து பேத்தியைத் தூக்கி வைத்துக்கொஞ்சிக் குலாவிச் சந்தோஷமாய்க் காலந்தள்ள வேண்டிய காலம் கடவுள் இப்படிக் காலந்தள்ள வைத்திருக்கிறார்.

வயதானவர் ஒருவர் குறுக்கிட்டு சும்மா இருங்க பொண்ணுங்களா! அவள் பாவம் விம்மலும் பொருமலுமாய்த் துயரம் பொறுக்க மாட்டாமல் அடக்கிக் கொண்டு இருப்பது தெரியலியா? என்றார்.

பிறகு அந்த அம்மையாரைப் பார்த்து சொன்னார்;

நீ சும்மாயிரம்மா இந்தப் பொண்ணுங்க உன்துயரத்தைத் தூண்டி விடறாங்க நீ வாங்கி வந்த வரம் அப்படி வீடும் குடும்பமுமாயில்லாவிட்டாலும் சுகமாய் சாப்பிட்டு விட்டாவது இருக்கலாம். உன் தலை எழுத்து அவன் ஜெயிலில் கிடக்க வேண்டும் அதை நினைத்து அழுது அழுது சாகவேண்டும். என்று எழுதியிருக்கிறதே! சரி. அந்த நினைவை மறந்து விடு என்று கூறி முடித்தார்.

இதைக் கேட்டவுடன் நாயுடு எழுந்து நின்று பின்னால் பார்த்தார்.

சும்மாயிருங்கள் அத்தை அழாதீர்கள் அழுதா தீர்ந்துவிடுமா சின்னம்மா? என்ற குரல்கள் பெரிதாய் ஒலித்தன வண்டியும் சிவரக்கோட்டையில் நின்றது.

ஒருவயதான மாதரசி விம்மி விசித் தழுவதையும் தான் அணிந்திருந்த வெள்ளைப் புடவையின் முந்தானையால் முகத்தை மறைத்துக்கொண்டு பெருமூச்சுடன் பொருமுவதையும் கண்டார் நாயுடு அவர்கள் அனைவரும் விருதுநகர்க்காரர்கள் என்றும் தெரிந்து கொண்டார்.

அழுபவர் யாராக இருக்காலம் என நாயுடு ஊகித்துக்கொண்டாலும் முகத்தைப் பார்த்து ஊகத்தைச் சரிபடுத்திக்கொள்ள முடியவில்லை. அவராகவே அந்த அம்மாளை அழச் செய்தவர்களிடம் சென்றார். அந்த அம்மாள் இன்னாரா? என்று கேட்டார் ஆம் என்றனர். அவர் கேட்டதைக் கண்டு முகத்தைத் துடைத்துக்கொண்ட அந்த அம்மாள் முகத்தை மறைத்திருந்த முந்தானையை விலக்கினார்.

இந்த அம்மையாரைத் துயரத்திலாழ்த்தி அழச் செய்து நீங்களே இனி வேறு விஷயங்களைப் பேசுங்கள் என்று கடிந்து கூறிப் பெஞ்சின் ஒரு புறத்தில் அந்த அம்மாளை அமரச் செய்தார் நாயுடு. பெஞ்சில் வேறு இடம் இல்லாததால் நாயுடு நின்று கொண்டிருந்தார்.

*வண்டி விருதுநகரை அடைந்தது!*

அந்த அம்மையாரும் நாயுடுவிடம் விடைபெற்று வண்டியிலிருந்து இறங்கித் தன்னுடன் வந்த மற்றப் பெண்களுடன் சேர்ந்து சென்றார். தலைவரின் சமவயது கொண்ட நாயுடுவுக்கு அப்போது திருமணமாகிக் குழந்தைகள் இருந்தனர். குடும்பத்திலுள்ள தாய் தந்தையரின் ஆசைகளும் பாசங்களும் எத்தன்மையது என்று சிந்தித்தார். நாயுடு புத்திர வாஞ்சையும் அப்புத்திரனால் அனுபவிக்கக் கருதிய ஆசைகளும் தான் எத்தனை எத்தனை! பெற்ற தாயின் இயல்பான நல் விருப்பங்களுக்கு இடம் தாராமல் தேசத் தொண்டே பெரிதென வாழ்ந்த அந்த அம்மையாரின் புதல்வன் பின் நிலையைச் சுற்றியும் நாயுடுவின் எண்ணம் சென்றது பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு என்று அவர் வாய் முணுமுணுத்தது.

தலைவர் காமராஜின் அன்னையார் சிவகாமி அம்மையாரை ரெயிலில் சந்தித்தது குறித்தும் அப் போது நடந்த பேச்சு குறித்தும் 1962 ஆம் ஆண்டில் ஒரு நாள் நாயுடு என்னிடம் விரிவாகச் சொன்னவையே இவை.

## 8.1942 புரட்சியில்

*கூரிய வாளின் முனையில்...!*

1942 இந்திய விடுதலைப்போர் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது ஆகஸ்டு இந்தியாவின் மானம் காத்த மாபெரும் ஆகஸ்டு புரட்சி வெடித்துக் கிளம்பியது இந்த ஆண்டில்தான்.

நாம் நீட்டப்பட்ட கூரிய வாளின் முனையிலே நிற்பது போல் இருக்கிறோம் . எந்த நேரத்தில் என்ன நடக்கும் என்றே தெரியவில்லை. எதுவும் நடக்கலாம்! எதற்கும் நாம் தயாராக இருக்கவேண்டும் என்று ஆசிய ஜோதியாக விளங்கிய நேருஜி முழங்கியது இந்த ஆண்டில் தான்.

1939இல் உலகப் போர் துவங்கியது பிரிட்டன், அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகள் ஒரு பக்கமும் ஜெர்மனி, ஜப்பான் ,இத்தாலி ஆகிய நாடுகள் இன்னொரு பக்கமுமாக இருந்து போரைத் துவக்கின.

(தொடரும்)

# முல்லை, மாங்குளம், கிளிநொச்சியில் கட்டுமானப்பயிற்சி நிகழ்வுகள்

(வவுனியா)

முல்லைத்தீவு மாங்குளம் கிராம மக்களுக்கான கட்டுமானப் பயிற்சி நிகழ்வு பேரெழுச்சியுடன் நடை பெற் றது. மாங்குளம் கோட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சரவணன் தலைமையில் கடந்த வியாழக் கிழமை பிற் பகல்3.30 மணிக்கு நிகழ்வு நடைபெற்றது.

தமிழீழ த் தேசியக் கொடியினை தமிழீழ மாணவர் அமைப்பு பொறுப்பாளர் செ.முகுந்தன் ஏற்றினார். மாங்குளம் மகாவித்தியாலய முதல்வர் மற்றும் செ.முகுந்தன் சரவணன் ஆகியோர் கருத்துரைகளை நிகழ்த்தினர். மாங்குளம் பிரதேச மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் இனியவன் பயிற்சியினை தொடங்கி வைத்தார்.

இதேவேளை, ஒட்டுசுட்டான் வித்தியாபுர மக்களுக் கான மக்கள் படைக் கட்டுமானப் பயிற்சியும் அன்றைய தினம் தொடங்கியது. பயிற்சி ஆசி ரியர் விஜயன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியினை முத்துஜயன் கட்டு பிரதேசப் பொறுப்பாளர் புலிக் குட்டி ஏற்றினார்.

கிளிநொச்சி புலோப்பளை றோமன் கத்தோலிக்க பாட சாலை மாணவர்களுக்கான மாணவர் சேனை படைக் கட்டுமானப் பயிற்சி காலை 6.00 மணிக்கு பயிற்சி ஆசி ரியர் தே.சீராளன் தலைமையில் தொடங்கியது. தேசியக் கொடியினை யாழ். மாவட்ட மகளிர் அரசியல் துறைப் போராளி வதனி ஏற்றி வைத்தார்.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை நிர்வாகப் பொறுப் பாளர் ஆதித்தன் கருத்துரையாற்றி மாணவர்களுக்கான பயிற்சியினை தொடங்கி வைத்தார். பயிற்சி ஆசிரி யர் தே.சீராளன் பயிற்சிகளை வழங்கினார். (கு)

# வங்கதேச கடற்படைத்தளபதி இன்று இலங்கை வருவார்

(கொழும்பு)

வங்கதேச கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் ஹசன் அலிகான் இன்று இலங்கை வருகிறார் . ஒருவார கால உத்தியோகப்பூர்வ பயணமாக அவர் இங்கு வரவுள்ளார் . அவர் பாதுகாப்புத் தரப்பினருடன் இரு தரப்பு கடற்படை உறவுகளை வலுப்படுத்துவது குறித்து பேச்சுக்கள் நடத்துவார் என்று இலங்கை கடற்படையின் பேச்சாளர் தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முப்படைத் தளபதி டொனால்ட் பெரேரா, கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட ஆகியோரை ரியர் அட்மிரல் சந்தித்துப் பேசவுள்ளார்.

இலங்கை முக்கிய கடற்படைத் தளங்களையும் அவர் பார்வையிடக் கூடும் என்று தெரிகிறது. (கு)

# யாழ்.கிளிநொச்சி மாவட்ட முஸ்லீம் மக்களின் அபி.நிறுவனம் அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கிளிநொச்சி மாவட்ட முஸ்லிம் மக்களின் அபிவிருத்தி நிறுவனத்தின் அங்குரார்ப்பணக்கூட்டம் கடந்த 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பளை பிரதேச செயலக மண்டபத்தில் மௌலவி எஸ்.எம். ஸஹீவ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் உலமாக்கள், வர்த்தகர்கள், பள்ளி வாசல் நிர்வாக சபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து நிர்வாகசபைத் தெரிவு இடம்பெற்றது. தலைவராக எம். யு.எம்.தாஹீர், செயலாளராக மௌலவி எஸ்.எம். ஸஹீல், உபசெயலாளராக மௌலவி எம்.பாஹீர் , பொருளாளராக மௌலவி எம்.ஜீ.எம். இர்பான், திட்ட மிடல் பணிப் பாளராக எஸ்.எம்.ஸஹீல் ஆகியோரும் நிர்வாக சபை உறுப்பினர்களாக எஸ். கே. அஸ்மி, எம். அஜ்வாத்த, எஸ்.எம். சுலை மான் , எ.சி.மாகீர் ,எ.நவாஸ், வி.சி.எஸ்.ஹவுஸ்சுனாம், எ.ஸாசீக், எம். அஸன் அகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (து-9)

# கடன் அட்டை மோசடி புரிந்த இலங்கையர் நால்வர் கைது

இங்கிலாந்தில் வசிக்கும் வசதி படைத்தவர்களின் கடன் அட்டைகளின் இரகசிய இலக்கங்களை திருடி போலி கடன் அட்டைகளைத் தயாரித்த 4 இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேல் மாகாண குற்றத்தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட இந்த நடவடிக்கையில் 2800 போலி கடன் அட்டைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. பெருந்தொகையிலான போலி கடன் அட்டைகள் இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதுவே முதல் முறை என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. இது உலகின் மிகப் பெரிய கடன் அட்டை மோசடிகளில் ஒன்று என்று மேல் மாகாண குற்றத் தடுப்புப் பிரிவின் உதவி பொலிஸ் அதிகாரி பிரியந்த ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர்களில் மூவர் சிங்களவர் ஒருவர் ஏறாவூரைச்சேர்ந்த தமிழர் சிங்கள்வர் கள் ஹெராரண , ராகம, அம்பே புஸ்ஸ ஆகிய இடங்களைச் சேர்ந்திதவர்கள். இந்தசம்பவம்தொடர்பில்பொல் காவலை யில் வசிக்கும் முஸ்லிம் ஒருவரும் கைது செய்யப்படவுள்ளார். இந்த சந்தேகநபர்கள் அனைவரும் இங்கிலாந்திலிருந்து அண்மையில்நாடு திரும்பியவர்கள் இவர்களில் இருவர் கணனித்துறையில் சிறந்த அனுபவத்தைப் பெற்றுள்ளதாகவும் இங்கு அது தொடர்பான கற்கையினை மேற்கொண்டுள்ளனர் என்றும் குற்றத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

இந்த சந்தேக நபர்கள் போலி கடன் அட்டைகளைப் பயன்படுத்தி இலங்கையிலிலுள்ள தனியார்வங்கிகளிலிருந்து சுமார் ஒரு கோடி ரூபா பணத்தைப் பெற்றிருப்பதாக கூறப்படுகிறது. கைப்பற்றப்பட்டகடன் அட்டைகள் தவிர மேலும் 5. 995 போலி கடன் அட்டைகளைத் தயாரிப்பதற்கு அவர்கள் திட்டமிட்டிருந்ததும் தெரியவந்துள்ளது.

இதற்காக இங்கிலாந்தில் வசிக்கும் வசதி படைத்தவர்களின் கடன் அட்டை இரகசிய இலக்கங்கள் மற்றும் தரவுகளை அவர்கள் ஒரு கணனியில்பதிவுசெய்துவைத்துள்ளனர்.

இங்கிலாந்தில் எரிபொருள்நிலையங்களில் பணியாற்றும் இலங்கையர்கள் ஊடாகவே இவர்கள் இத்தகைய கடன் அட்டைகளின் இரகசிய இலக்கங்களைக் கண்டறிந்திருப்பதாக்க் கூறப்படுகிறது. கைது செய்யப்பட்டோரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் பெறப் பட்ட தகவல்கள் இங்கிலாந்து தூதரகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் தூதரக அதிகாரிகளும்விசாரணைகளுக்கான ஒத்துழைப்பினை வழங்கியதாக குற்றத் தடுப்புப்பிரிவினர். தெரிவித்துள்ளனர் (கு)

# புனிதப்போர் சிங்கம் ஜர்காவி ஓஸாமா பின்லேடன் பாராட்டு

(கெய்ரோ)

சர்வதேச பயங்கரவாதி ஒசாமா பின் லேடனின் பேச்சுகள் அடங்கிய புதிய வீடியோ டேப் ஒன்று இணையத்தளத்தில் வெளியிடப் பட்டுள்ளது. அதில் ஈராக்கில் அமெரிக்க இராணுவத்தால் கொல்லப்பட்ட அல்–குவைதா தளபதி ஜர்காவியை புனிதப் போர் சிங்கம் என ஒசாமா பின்லேடன் புகழ்ந்துள்ளார்.



அமெரிக்காவால் தேடப்பட்டு வருபவர் சர்வதேச பயங்கரவாதி பின்லேடன் இவரின் அல்குவைதா தீவிரவாத அமைப்பின் ஈராக் பிரிவு தளபதியாக இருந்தவன் அபுமுகாப் அல் ஜர்காவி கடந்த மாதம் 7ஆம் திகதி ஈராக்கை தலை நகர் பாக்தாத்தில் அமெரிக்க படையினர் நடத்திய வான்வெளி தாக்குதலின் போது ஜர்காவி கொல்லப்பட்டான்.

ஜர்காவிக்கு அஞ்சலி செலுத்தும் பொருட்டு அவனை புகழ்ந்து வீடியோ டேப் ஒன்றை ஒசாமா வெளியிட்டுள்ளார். இணையதளத்தில் வெளியாகி உள்ள 19 நிமிடங்கள் ஓடும் அந்த வீடியோ காட்சியில் பின்லேடன் மற்றும் ஜர்காவியின் ஸ்டில் புகைப்படங்கள் மட்டும் அடுத்தடுத்து இடம் பெற்றுள் ளன.

அந்த டேப்பில் அமெரிக்கர்களின் வெட்ககரமான தேடுதல் வேட்டையின்போது புனித போரின் சிங்கமும் குறிக்கோளை அடையக்கூடிய சிறந்த மனிதனுமான அல்ஜர்காவி கொல்லப்பட்டது குறித்து நம்முடைய முஸ்லிம் தேசமே வியப்படைகிறது.

ஒரு மிகப் பெரிய வீரனை நாம் இழந்து விட்டோம். நம்முடைய முஸ்லிம்,தேசங்களின் ஒரு அடையாளமாக அவர் மாறிவிட் டார். புனித போரில் ஈடுபட்டுள்ள வீரர்கள் அவரை நினைவு கூர்ந்து பாராட்ட வேண்டும் என ஒசாமா தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டில் பின்லேடன் அனுப்பிய நான்காவது வீடியோ டேப் இது எனினும் அவரது குரல்மட்டுமே பதிவு செய்யப்பட்டு ஒலி பரப்பாகி வருகிறது என்பது குறிப் பிடத்தக்கது. (து)

# சதாமின் வழக்கறிஞர்களுக்கு பாதுகாப்பளிக்கப்படவேண்டும்

(வாஷிங்டன்)

ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம் உசேன் வழக்கில் அவருக்கு நியாயம் கிடைக்க வேண்டுமென்றால் அவர் சார்பாக ஆஜராகும் வழக்கறிஞர்களுக்கு அமெரிக்க இராணுவம் பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்று அவருக்காக ஆஜரான அமெரிக்க வழக்கறிஞர் ரம்சே கிளார்க்கேட்டுள்ளார்.

சதாம் உசேனை கொலை செய்ய மேற் கொள்ளப்பட்ட முயற்சி தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து துஜயில் என்ற கிராமத்தைச் சேர்ந்த 148 ஷியா முஸ்லிம்களை சதாம் சித்திரவதை செய்து கொல்ல உத்தர விட்டார் என்று அவர் மீதும் அதை செயல் படுத்தியதாக அவரது ஆதரவாளர்கள் 7 பேர் மீதும் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

தனி நீதிமன்றத்தில் நடந்து வரும் இந்த விசாரணையில் அவர் சார்பாக ஆஜரான வழக்கறிஞர் 3 பேர் இதுவரை கொலை செய்யப்பட்டுள்ளனர். எனவே வழக்கறிஞர்களுக்கு அமெ ரிக் கா பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று சதா மின் வழக்கறிஞர் ரம்சே கிளார்க் கேட்டுள் ளார். அவர் வாஷிங்டனில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறுகையில், இவ் விசாரணை நியாயமாக நடக்க சாத்தியம் இல்லை அதற்குரிய பாதுகாப்பையும் அமெரிக்காவால் மட்டும் தான் தரமுடியும்.

சதாமின் வழக்கறிஞர்களுக்கு பாதுகாவலர்களை அமெரிக்கா நியமிக்க வேண்டும் வழக்கறிஞர்களின் குடும்பத்தினரை ஈராக்கு வெளியே அனுப்பிவிடவேண்டும்.

இது போன்ற பாதுகாப்பில்லாமல் நடத்தப்படும் விசாரணை வெறும் கண்துடைப் பாகத்தான் இருக்கமுடியும் அது நீதியின் மீது படிந்த கறையாகும்.

எங்கள் ஆதரவு சாட்சிகளும் மிரட்டப்படுகின்றார்கள் சாதமின் வழக்கறிஞர் நீதி மன்றத்தில் சிறப்பாக செயல்படவும் அனுமதிக்கப்படுவதில்லை சாட்சிகள் குறுக்கு விசாரணை நடத்தவும் போதுமான அவகாசம் தருவதில்லை என்றார். (கு-9)



சென்னையில் நிறுவப்பட விருக்கும் நடிகர் சிவாஜி கணேசனின் சிலையை தேனாம்பேட்டையில் உள்ள சிற்பக்கூடத்திற்கு முதல்வர் கருணாநிதி பார்வையிட்டார்.

# மாவோயிஸ்ட் தீவிரவாதிகள்— வன்முறைக்குத் திரும்பமாட்டார்கள்

## அதன் தலைவர் உறுதிபடத்தெரிவிப்பு

நேபாளத்தின் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் மீண்டும் வன்முறைக்குத் திரும்ப மாட்டார்கள் என்று அதன் தலைவர் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

புதிய சட்டசபைக்கான தேர்தலை நடத்துவதற்கு தற்போதைய அரசாங்கத்துடன் இணக்கப்பாடு காணப்பட்டுள்ளமை மீண்டும் ஒரு மோதல் ஏற்படாது என்பதனை தெளிவுபடுத்துவதாக மாவோயிஸ்ட் தலைவர் பிரசாந்த தெரிவித்துள்ளார்.

எனினும் இப்பேச்சு வார்த்தைகள் தோல்வியுற்றால் பாரிய ஆர்ப்பாட்டங்கள் நடத்தப் படலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

இரண்டு மாதங்களுக்கு முன் அங்கு வீதி ஆர்ப்பாட்டங்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டதையடுத்து மன்னராட்சிக்கு முடிவு காணப்பட்டதோடு நேபாள அரசாங்கமும் தீவிரவாதிகளும் யுத்த நிறுத்தம் ஒன்றிற்கு உடன் பட்டிருந்தனர்.

நேபாளத்தில் மூன்று வருடங்களுக்கு முன்னர் வன்முறைகள் இடம்பெற்ற காலப் பகுதியில் இரு முறை சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடத்தப் பட்டபோதிலும் அவை பலனளிக்க வில்லை.

எனினும் தற்போதைய நிலைமைகள் மாறியிருப்பதாக மாவோயிஸ்ட் தலைவர் தெரிவித்துள்ளார். பேச்சுவர்த்தைகள் தோல்வியடைந்தால் அமைதி வழிப்போராட்டங்களை நடத்து மாறு மக்களைக் கோரவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள அவர் எக் காரணம் கொண்டும் யுத்தத் திற்குச் செல்லப்போவதில்லை என்றும் குறிப் பிட்டுள்ளார்.

புதிய அரசாங்கத்துடன் நடத்தப்பட்டு வரும் பேச்சுவார்த்தைகள் முன்னேற்றகரமான பாதையை நோக்கி நகர்ந்து கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (து)

# 28 ஏவுகணைகளுடன் கூடிய அணுசக்தி நீர் மூழ்கிக் கப்பல்


## இந்தியாவுக்கு வழங்குகிறது ரஷ்யா

(மாஸ்கோ)

ரஷியகடற்படை சார்பில் நேர்பாரக அதிநவீன நீர்முழ்கி கப்பல் உருவாக்கப்பட்டுள்ளது. அகுலா -2 என்ற இந்த நீர்மூழ்கி கப்பல் ஒரே நேரத்தில் 28 அணு ஆயுத ஏவுகணைகளை செலுத்த முடியும். இந்த ஏவுகணைகள் நீர்மூழ்கி கப்பலில் இருந்து 3000 கிலோ மீட்டர்தூரம் வரை பறந்து சென்று எதிரிகளின் இலக்கை குறி வைத்துத் தாக்கும் ஆற்றல் உள்ளது.

இந்த அதிநவீன நீர்மூகிழ்க் கப்பலை அ-ர் கப்பல் கட்டும் தொழிற்சாலையில் இருந்து ரஷியா நேற்று முன்தினம் வெள்ளோட்டம் விட்டது. ஆர்.எஸ்.எம். 54 என்ற நவீன ஏவு கணைகளையும் அதில் இருந்து செலுத்தி சோதனை செய்து பார்த்தது.

இந்த அதிநவீன நீர் மூழ்கிக்கப்பலை இந்தியாவுக்கு ரஷ்யா வழங் குகிறது. 10 ஆண்டுக ளுக்கு குத்தகை அடிப் படையில் இந்த நீர் மூழ்கி கப்பல் வழங்கப்படுகிறது இது தொடர்பாக இந்தியா, ரஷியா இடை யேகடந்த 2004 ஆம் ஆண்டு இரகசிய ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. (து)



உலகின் மிகப்பெரிய கோடீஸ்வரர் பில் கேட்ஸ், அவரதுமனைவி மெலிண்டாகேட்ஸ் ஆகியோர் நடத்தி வரும் பில் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளைக்கு ஒரு இலட்சத்து 66ஆயிரத்து 500கோடி ரூபாய் நன்கொடை அளித்துள்ளார் உலகின் இரண்டாவது கோடீஸ்வரர் வாரன் பப்பெட்

WORLD NEWS

உலக தரிசனம்

# மிக உயரமான மட்டத்தில் அமைக்கப்பட்ட ரயில் பாதை

உலகிலேயே மிக உயரமான மட்டத்தில் அமைக்கப்பட்ட புகையிரதப் பாதையை சீன ஜனாதிபதி நேற்றையதினம் திறந்துவைத்தார்.

திபெத்தின் குக்கிராமங்கள் ஊடாகச் செல்லும் இந்தப் பாதை ஏனைய பிரதேசங்களுக்கும் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. சீனாவின் அதி சிறப்பு வாய்ந்த தொழில் நுட்பப்பணியாக இது கருதப்படுகிறது.

சுமார் 708 மைல் கள் இந்த ரயில் பாதை தொடர்பு படுத்தப்பட்டுள் ளது சீனாவின் வட மேற்கில் உள்ள கிங் ஹாய் மாகா ணத்துடன் திபெத் தின் லாஸா தலை நகரை இப்பாதை தொடர்பு படுத்துகிறது. அதி உய ரத்தில் பயணம் செய்யும் போது ஏற் படும் உடல் உபாதைகளைத் தவிர்க்குமுகமாக மேலதிக ஒட்சிசன்வாயு ரயில் பெட்டிகளுக் குள் நிரப்பட்டுள்ளது.

கடல் மட்டத்திலிருந்து 5 ஆயிரத்து 72 மீற்றர் உயரத்தில் இருக்கும் மலையில் இந்த ரயில் பாதை அமைக்கப்பட்டுள்ளது. இந்த உயரம் திபெத்தின் மலை முகடுகளுக்கு ஈடான உயரத்தில் உள்ளது. (து)

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்.
- தேவாரம்

வலம்புரி

## ஆமையைக் கொன்றால் குற்றம் பசுவைக் கொன்றால்...?

இலங்கையில் பிறந்த குற்றத்திற்காக தமிழர்கள் படும்பாடு சொல்லுந் தரமன்று. சிறுபான்மை என்ற பெயரால் இழைக்கப்படும் அநீதி மற்றும் உரிமை மறுப்பு உலகத்தால் அங்கீகரிக்கப்பட்ட விடயமாகிவிட்டது.

சொந்த மண்ணிலேயே வாழ முடியாது அகதிகளாகத் தவிக்கும் பரிதாபம் இந் நிலையில் அவர்களின் உரிமைப் போராட்டத்தை ஏற்றுக் கொள்ளாத உலக நாடுகள்,இந் நிலையில் ஈழத் தமிழர்களின் சொத்துரிமை என்பதால் அவர்களின் கால்நடைகளுக்கும் கூட நடமாடும் உரிமையில்லை.

சுருங்கக்கூறின் வடக்கு கிழக்கில் உள்ள தமிழர்களுக்குச் சொந்தமான கால்நடைகளுக்கும் பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசரகாலத் தடைச் சட்டம் என்பன பொருந்தும்.

கடந்த காலங்களில் யுத்த விமானங்கள் நடத்திய குண்டுத்தாக்குதல்களில் நூற்றுக் கணக்கான மாடுகள் கூண்டோடு கொல்லப்பட்டமை முடிந்து போன கதை.

இப் பொழுது பருத்தித்துறையில் ll பசுமாடுகள் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளன. அதிகாலை வேளை இந்த அட்டூழியம் நடந்துள்ளது. காவலரண்களுக்கு அண்மையில் சென்ற பசுமாடுகளே இவ்வாறு படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளன.

எப்படி இருக்கிறது நிலைமை ! தமிழர் தாயகத்தில் மாடுகள் நடமாடுவதற்குக்கூட சுதந்திரம் இல்லை.

ஜீவகாருணியம் பற்றிப்பேசும் உலக நாடுகள் வட புலத்து யாழ்ப்பாண மண்ணில் ll பசுமாடுகளை படையினர் சுட்டுக்கொன்றமை தொடர்பில் ஏதேனும் பரிதாபம் ... இல்லவே இல்லை.

ஐந்தறிவு ஜீவராசிகளுக்கு , ஆறறிவு படைத்த சீருடையினர் கொடுத்த தண்டனை இதுவென்றால் ஈழத்தமிழர்களின் வாழ்வியல் எப்படியிருக்கும் என்பதை புரிந்து கொள்வதில் அதிக சிரமம் இருக்கமுடியாது.

அதிலும் வேடிக்கை என்னவெனில், இலங்கைத் திருநாட்டில் பெரும்பான்மை சிறுபான்மை என்ற வர்க்கப்பிரிப்பிற்கு இருக்கக்கூடிய சட்ட வேறாக்கம் சமயம் சார்கருத்தியல் கோட்பாடுகளுக்கும் இருப்பதை பசுமாடுகள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் வெளிப்படுத்திநிற்கிறது.

ஆம் இலங்கையில் ஆமையைப் பிடிப்பது அதைக்கொலை செய்வது எல்லாம் மிகப்பெரும் பாவமாகவும் தண்டனைக்குரிய குற்றமாகவும் கொள்ளப்படுகிறது.

கௌதம புத்தபிரான் அவதாரத்துடன் தொடர்புபடுத்தி ஆமைக்கு இத்துணை பாதுகாப்பு பரவாயில்லை.

கடலாமைகளின் எண்ணிக்கையில் ஏற்படும் பற்றாக்குறைக்கு இச் சட்டம் உத்வும் என்ற வகையில் ெகளதம புத்தபிரான் என்ற பெயரால் அவை கொலை செய்யப்படுவதை தடுப்பது வரவேற்கப்படலாம் என்பதில் இரு வேறு கருத்திற்கு இடமில்லை.

ஆனால் புத்தபெருமான் அவதாரத்துடன் தொடர்பு பட்டதாக கூறப்படும் ஜாதீகக்கதையில் ஆமைக்கு வழங்கப்படும் அதிகளவு பாதுகாப்பை இந்து மக்கள் தமது முதல் தெய்வமாகப் போற்றும் பசுக்களுக்கும் தரலாம் அல்லவா?

இதில் மட்டும் ஏன் பாகுபாடு அப்படியானால் இலங்கையில் பௌத்த மதம் தவிர்ந்த வேறு மதங்களுக்கு இடமில்லை என்பது பொருளாகும்.

இதனையே பருத்தித்துறையில் நடந்த பசுவதை உணர்த்தி நிற்கிறது. இந்து மதத்தவர்களின் மனங்களை புண்படுத்திய மேற்போந்த சம்பவங்கள் குறித்து இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் உரிய நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

ll பசுக்களை ஈவிரக்கமின்றி கொலை செய்த படையினருக்கு இந்து மதத்தை நிந்தனை செய்த குற்றத்தின் அடிப்படையில் தண்டனையும் வழங்க வேண்டும்.

இந்தப் பசுக்களின் இழப்பால் நட்டமடைந்த குடும்பங்களுக்கும் உரிய இழப்பீடு வழங்கப்பட வேண்டும். இதனைச் செய்வதற்கு அரசு தயாரா? இல்லையேல் சமாதானம் சமத்துவம் சமய சமரசம் என்பதல்லாம் வெறும் பேச்சாகவே அன்றி அதில் எந்தவித உண்மையும் இல்லை என்பதே உண்மை.

# இராணுவக் கட்டமைப்புக்குள் ஊடுருவல்கள்

## பலவீனத்தை அம்பலப்படுத்தும் கொழும்பு ஊடகம்

(கொழும்பு)

இலங்கை இராணுவம் தலைமை நிலையிலிருந்து கீழ் நிலைவரை எவ்வாறு பலவீனமடைந்திருக்கிறது என்பதை கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று அம்பலப்படுத்தியுள்ளது.

இலங்கை இராணுவத்தின் பிரதித்தளபதி பரமி குலதுங்க கொல்லப்பட்ட பின்னர் கொழும்பு நகரின் பாதுகாப்பு ஏற்பாடுகளை இலங்கை புலனாய்வுத்துறை மறு ஆய்வுக்குட்படுத்தி புதிய பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்துள்ளது.

இலங்கையின் வர்த்தக நிறுவனங்களில் பெருமளவில் தமிழீழ விடுதலைப்புலிகள் ஊடுருவியிருப்பது குறித்தும் ஆராயப்பட்டு வருகிறது. கொழும்பு நகரின் பாரிய பாதுகாப்பு குறைபாடுகளால் கொழும்பில் எந்த ஒரு தாக்குதலையும் தமிழீழ விடுதலைப் புலிகளால் நடத்த முடியும் என்றும் புலனாய்வுத்துறை அறிக்கை எச்சரித்துள்ளது.

யுத்தம் வெடித்தால் ஏற்கனவே கொழும்பு நகரில் உள்ள விடுதலைப்புலிகள் வழமை போல் முக்கிய பிரமுகர்கள் மற்றும் முக்கிய நிலைகள் மீது தாக்குதல் நடத்தக்கூடும். இலங்கை இராணுவத்தளபதி சரத் பொன்சேகா மீது கொலை முயற்சித் தாக்குதல் நடத்தப்பட்டு அவர் காயங்களுடன் உயிர்தப்பிய நிலையில் இரு மாதங்கள் கழித்து இராணுவத்தின் மூன்றாம் நிலைத்தளபதியான பரமி குலதுங்க மீது தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அண்மைக்காலத்தில் கொல்லப்பட்ட விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளின் படுகொலைகளுக்கான எதிர்வினையாக இந்த வாரத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது எனக் கருதப்படுகிறது.

பெயர் வெளியிட விரும்பாத முன்னாள் இராணுவத்தளபதி ஒருவர் கூறுகையில் மேஜர் ஜெனரல் பொறுப்பில் உள்ளவர் பிரதித்தளபதியாக இருந்தவர் மீதான இந்த தாக்குதல்கள் மூலம் இலங்கை இராணுவத்தின் எந்த ஓர் இராணுவ உயர் அதிகாரியையும் தங்களால் தாக்க முடியும் என்ற கடுமையான செய்திகை இலங்கை அரசாங்கத்துக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் அனுப்பியுள்ளனர். சரத் பொன்சேகா தாக்கப்பட்ட இரு மாதங்களில் நடத்தப்பட்டிருக்கும் இத்தாக்குதல் மூலம் இலங்கை இராணுவத்தினரினதும் மன உறுதியைச் சீர்குலைக்க முடியும் என்றும் விடுதலைப் புலிகள் அறிந்துள்ளனர் என்றார்.

பரமி குலதுங்க கொல்லப்பட்டதையடுத்து ஸ்ரீலங்கா இராணுவத்தின் தலைமை நிலையில் பாரிய வெற்றிடம் ஏற்பட்டிருக்கிறது. மிகவும் அதி நவீனமாக உள்ள பயங்கரவாத இயக்கத்தை எதிர்த்து நிற்க வேண்டிய நிலையில் ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் இராணுவத் தளபதியோ எதுவும் செய்ய முடியாத நிலையில் உள்ளார். மூன்றாம் நிலை தளபதியோ கொல்லப்பட்டுவிட்டார். இரண்டாம் நிலைதளபதியாக மேஜர் ஜெனரல் நந்தா மல்லாவராச்சியோ சில மாதங்களில் ஓய்வு பெறவுள்ளார்.

பாதுகாப்பு நிலைமைகளோ சீர்குலைந்தும் இராணுவத் தலைமையிலோ நெருக்கடியுமாக ஏற்பட்டுள்ள நிலையில் மேலும் பல மூத்த இராணுவ அதிகாரிகள் தங்களது ஓய்வு காலத்துக்கு முன்னமே ஓய்வுபெற விண்ணப்பித்துள்ளதாகவும் பெயர் வெளியிட விரும்பாத முன்னாள் இராணுவத் தளபதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

யாழப்பாண இராணுவத் தளபதியான மேஜர் ஜெனரல் பி.சந்திரவன்ச ஏற்கனவே தனது விலகல் கடிதத்தை அனுப்பி விட்டார். கொழும்பு கட்டளைத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் சந்திரவன்ச , சரத் பொன்சேகாவால் யாழ்ப்பாணத்துக்கு மாற்றப்பட்டார். திறமை வாய்ந்த இராணுவத் தளபதியான மேஜர் ஜெனரல் சந்திரவன்சவுக்கு சில மாதங்களில் 51 வய்தாகிறது. நேற்று முன்தினத்திலிருந்து இவர் 3 மாத கால விடுப்பில் செல்கிறார். இந்த மூன்று மாத கால ஓய்வுக்குப் பின்னர் மேஜர் ஜெனரல் சந்திரவன்ஸ ஓய்வுபெறவுள்ளார்.

இலங்கை இராணுவத்தின் கடந்த சில மாத கால செயற்பாடுகளின் மீது அதிருப்தியடைந்திருப்பதால் இராணுவத்திலிருந்து அதிகாரிகள் விலகுவதாக தெரிகிறது.

இலங்கை இராணுவத்தில் முறைபடுத்தப்படாத பாதுகாப்பு மற்றும் முரண்பாடான இடமாற்றங்களைச் சுட்டிக்காட்டும் இராணுவ உயர் அதிகாரிகள் இத்தகைய நிலைமைகளினால் தாங்களும் விரைவில் விலகிச் செல்லக்கூடும் என்று கூறுகின்றனர். இரு மாத கால இடைவெளியில் நடத்தப்பட்டிருக்கும் இரண்டுதற்கொலைத் தாக்குதல்களானது பாதுகாப்பு தொடர் வலைப் பின்னலின் பலவீனத்தை வெளிபடுத்தியுள்ளது.

கடந்த வாரம் வெலிஓயாப் பகுதியில் கல்யாணபுர முன்னரங்க காவலரணில் பணிபுரியும் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த ஒருவரை இராணுவ காவல்துறையினர் கைது செய்தனர் அவர் விடுதலைப் புலிகளுடன் செய்மதி தொலைபேசியூடாக தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தார் எனக் கூறப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் முன்னரங்க காவலரண் பகுதிக்கு அந்த நபர் அடிக்கடி சென்று வருவதாக அவரைக் கண்காணித்த இதர இராணுவத்தினர் கொடுத்த தகவலுக்கமைய இந்தக் கைது மேற்கொள்ளப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட அந்த இராணுவத்தினிரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில் முதலில் அவர் நிலையற்றவராக பைத்தியம் போல் பாசங்கு செய்துள்ளார். அதன் பின்னர் நடத்தப்பட்ட கடும் விசாரணைகளில் மேலும் 5 படையினருக்கும் விடுதலைப் புலிகளுடன் தொடர்பிருப்பதாகவும் தாங்கள் விடுதலைப்புலிகளுக்கு உதவினால் அவர்கள் பணம் தருகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊதியப் பட்டியில் சில உயர் இராணுவ அதிகாரிகள் உள்ளிட்ட 45க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் இடம்பெற்றிருப்பதாக இரு வாரங்களுக்கு முன்னதாக ஊடகம் ஒன்றில் செய்தி வெளியானது இது தொடர் பாக சிறப்பு குற்றப் புலனாய்வுத் திணைக்களக் குழுவினர் விசாரணைக்காக நியமிக்கப்பட்டுள்ளனர்.

கல்யாணபுர முன்னரங்க காவலரணில் கைது செய்யப்பட்ட நபர் குற்றப் புலனாய்வுத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்று கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (கு)

# முச்சக்கர வண்டி, மோட்டார்சைக்கிளுக்கு புதிய வகை பெற்றோல் அறிமுகம்

(கொழும்பு)

முச்சக்கரவண்டி மற்றும் மோட்டார் சைக்கிள்களுக்கு பயன்படுத்தக் கூடிய இலாபகரமான பெற்றோலை அறி முகப் படுத்துவதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் முன் வந்துள்ளது.

பெற்றோலியக் கூட்டுத்தாபன ஆய்வாளர்கள் இது தொடர்பாக சாதகமான ஒரு முடிவை எடுத்துள்ளதாக ரயில் போக்குவரத்து மற்றும் கனியவள அபிவிருத்தியமைச்சு தெரிவிக் கின்றது.

தற்போது பாலவணையிலிருக்கும் ஒப்ரீன் 90 ரகபெற்றோலை விட இந்த புதிய ரகப் பெற்றோல் சிறந்த பலன் அளிக்கும் என நம்பப்படுகின்றது.

சபகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தினால் சுத்திகரிக்கப்படும் இந்த புதிய பெற்றோல் முச்சக்கர வண்டிகளுக்கு இலாபகரமாக அமையுமென ரயில் போக்குவரத்து மற்றும் கனியவள அபிவிருத்தியமைச்சு தெரிவித்துள்ளது.

ஒப்ரீன் 86 மற்றும் 87 ரக புதிய பெற்றோல் குறித்த ஸ்ரே என்ஜின் வகைகளுக்கு பொருந்தும் என்பது ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்த புதிய பெற்றோலை விநியோகிக்கக்கூடியதாக உள்ள போதிலும் விநியோக கட்டமைப்பிலுள்ள சிக்கல்கள் காரணமாக இதனை விநியோகிப்பதில் தாமதம் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அடுத்த வாரத்திற்குள் இந்த புதிய பெற்றோரை விநி யோகிப்பதற்கு உத்தேசித்துள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மேலும் தெரிவித்துள்ளது. (கு-9)

# தமிழ் வர்த்தகர்களிடம் கொள்ளையடித்த பொலிஸ் அதிகாரி கைதானார்

(கொழும்பு)

கொழும்புவெள்ளவத்தை பகுதியில் தமிழ் வர்த்தகர் களிடம் கொள்ளையடித்து வந்த பொலிஸ் அதிகாரி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

வெள்ளவத்தை பொலிஸ் பொறுப்பதிகாரி முதித் வீர சேகர குறித்து ஊழல் தடுப்பு ஆணையத்திடம் பல்வேறு முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. தமிழ் வர்த்தகர்கள் மற்றும் பணக்காரர்களின் வீடுகளுக்குள் நுழைந்து பல இலட்சம் ரூபாய் மதிப்புள்ள வீட்டுச் சாமான் களை அந்த அதிகாரி கொள்ளையடித்து வந்துள்ளார்.

கொள்ளையடிக்கப்பட்டவற்றில் பெரும்பாலானவை அவரது வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட வீரசேகர கொழும்பு தலைமை நீதிபதியிடம் முன்னிலைப் படுத்தப்பட்டபின்னர் விளக்கமறிலில் வைக்கப்பட்டார். (கு)

# ஆயுதங்களுடன் நால்வர் கைது

கொரன தம்பகொடவில் ஆயுதங்களுடன் நால்வர் கைது செய்யப்பட்டதாக இராணுவத்தினர் தெரிவித்தனர் 5 கிலோ வெடிபொருட்கள், 10 கிலோ அமோனியம் , 72 ஜெலட்டின் குச்சிகள், 31 டெட்டனேட்டர்கள் ஆகியவை அடங்கிய ஆயுதக் குவியலை தம்பகொட இராணுவ பயிற்சி மையம் அருகே நேற்று முன்தினம் மீட்டதாக இராணுவத்தினர் தெரிவித்தனர்.

மஸ்கெலியாவைச் சேர்ந்த இரு தமிழர்கள் அதே பகுதியைச் சேர்ந்த சிங்களவர் மற்றும் களனியாவைச் சேர்ந்த முஸ்லிம் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேக நபர்களும் வெடிபொருட்களும் அங்குரவத்த பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது. (கு)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



ஒரு விடயத்தைத் தெளிவாகப் புரிந்து கொண்டவரால் மட்டுமே அதை நன்றாக விளக்கிச் சொல்ல முடியும். இது ஒரு முகமாகக் குவிந்த ஆழ்ந்த சிந்தனையின் அடிப்படையிலேயே அமையும். அதையும் விடமேலானது தியான மார்க்கம்.

சுவாமி விவேகானந்தர்

# எரிகாயங்களுடன் அனுமதிக்கப்பட்டவர் வைத்தியசாலையில் உயிரிழப்பு

(பருத்தித்துறை)

எரிந்து கொண்டிருந்த குப்பைமீது மண்ணெண்ணெய் ஊற்றியபோது அது பற்றிக் கொண்டதில் குடும்பப் பெண் ஒருவர் மரணமானார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை 6.45 மணியளவில் தம்பசிட்டி பருத்தித்துறையில் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் முகாமைத்துவ பீடாதிபதி பேராசிரியர் நடராஜசுந்தரத்தின் மனைவி மங்களேஸ்வரி (வயது-52) என்பவரே மரணமானவராவார்.

அவரது வீட்டில் குப்பைகளுக்குத் தீ மூட்டியபோது அத் தீ அவரது உடையில் பிடித்துள்ளது. அப்போது படுகாயமடைந்த அவர் சிகிச்சைக்காக மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அங்கு சிகிச்சை பயனளிக்காமல் அவர் மரணமானார். (து-113,52)




அரசும் அதன் முப்படைகளும் தமிழ்த் துணை இராணுவக் குழுவினரும் தமிழ் மக்கள் மீது மேற்கொண்டு வருகின்ற அரச பயங்கரவாத வன்முறைகளையும் படுகொலைகளையும் சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்தும் மூகமாக ஐக்கிய நாடுகள் தலைமைச் செயலகம் முன்பாக அமெரிக்க வாழ் தமிழர்கள் நடத்திய அமைதிப் பேரணியை படத்தில் காணலாம்.

# கடலில் தூக்கி வீசப்பட்ட முஸ்லிம் கடற்றொழிலாளி

## மன்னாரில் சம்பவம்

(மன்னார்)

மன்னாரில் கைது செய்த மீனவர் ஒருவரை கடலில் மூழ்கடித்துக் கொலை செய்த கொடூரச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

மன்னார் பேசாலைப் பகுதியில் கரிசல்பாடு கடலோரக் கிராமத்தை சேர்ந்த மீனவர்கள் 15க்கும் மேற்பட்ட படகுகளில் நேற்றுக் காலை 10 மணியளவில் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது மூன்று அதிவேகத் தாக்குதல் டோறாப் படகுகளில் சென்ற கடற்படையினர் மீனவர்களின் படகுகளைச் சுற்றிவளைத்தனர்.

இரு மீனவர்கள் தங்களது மீன்பிடி அனுமதிப் பத்திரத்தைக் காண்பித்த போதும் கடற்படையினரால் தாக்கப்பட்டுள்ளனர். நான்கு குழந்தைகளின் தந்தையான இப்ராகிம் அசீக் (வயது-34) என்பவர் தனக்கு நீச்சல் தெரியாது என்றும் தன்னை விட்டுவிடுமாறும் கெஞ்சியுள்ளார்.

அதை அலட்சியம் செய்த கடற்படையினர் இப்ராகிம் அசீக் மற்றும் மொகமட் பாகீம் (வயது-27) இருவரையும் கடலில் தூக்கி வீசியுள்ளனர். அதில் அசீக் என்பவர் காணாமல் போயுள்ளார். அவரின் உடலைதேடவந்த இரு மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (ச)

## இந்தியாவில் பயிற்சி

இலங்கையின் கடற்படையினருக்கு இந்தியாவில் பயிற்சிகள் வழங்கவுள்ளதான தகவல்களை இந்தியாவின் என்.ரி.ரி. தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

அண்மையில் இந்தியா, இலங்கைக்கு இரு றேடர் கருவிகளை வழங்கியிருந்தது. இந்நிலையிலேயே இந்தியாவில் உள்ள பயிற்சி மையங்களில் இலங்கைப் படையினருக்குப் பயிற்சி வழங்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

றேடர் கருவிகளை இந்தியா வழங்கிய போது அதற்கு தமிழ் நாட்டிலிருந்து எதிர்ப்புக்கள் வெளிப்பட்டன. எனினும் தாம் இலங்கைக்கு இராணுவ உதவிகளை வழங்கவில்லையென இந்திய வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தியா மற்றும் இலங்கை நாடுகளுக்கிடையிலான பாதுகாப்பு ஒப்பந்தம், இலங்கை இனப்பிரச்சினை காரணமாக செய்து கொள்ளப்படுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக என்.ரி.ரி.தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

என்.ரி.ரி.தொலைக்காட்சி அண்மையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் செவ்வியை ஒளிபரப்பியமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-9)

## வல்வெட்டித்...

வில்லை. இலங்கைக் கடற்படையினரே மீனவர்களின் படகுகள்மீது தாக்குதல் நடாத்தியதாக யாழ்.மாவட்ட மீனவர்கள் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் தவரட்ணம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஆனால் தமது பாதுகாப்பு வலயத்தை நோக்கி வந்த படகு மீதே தாம் தாக்குதல் நடத்தியதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

வடமராட்சிக் கடலில் கடற்படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் மோதல் நடைபெற்றுள்ளதாக நேற்று வெளியான செய்திகளை விடுதலைப்புலிகள் மறுத்துள்ளனர். (ச-5)

## சுதந்திரக்...

தலைவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 23 ஆம் திகதி தொடக்கம் ஒரு வார காலம் கட்சியின் 'மறுசீரமைப்பு வாரம்' எனப் பெயரிடப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

கட்சி மறுசீரமைப்பு வாரத்தில் தொகுதியளவில் சிறப்பு நடவடிக்கைகள் செயற்படுத்தப்படவுள்ளன. அப்போது புதிய உறுப்பினர்கள் இணைந்து கொள்ளும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்றார். (ச-5)

# தமிழ் இளைஞன் மூதூரில் கடத்தல்

(திருகோணமலை)

மூதூரில் ராஜ் (வயது-25) என்ற இளைஞரை அடையாளம் தெரியாத நபர்கள் கடத்திச் சென்றுள்ளனர்.

மூதூர் நகரின் மையப் பகுதியில் நாவலடியில் நேற்று முற்பகல் 11 மணியளவில் மூதூர் இறங்குதுறைக்கு அவர் சென்று கொண்டிருந்தபோது இக் கடத்தல் சம்பவம் நடந்துள்ளது.

கடத்தப்பட்ட ராஜ் விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதியான இறால்குழியை சேர்ந்தவர். நாவலடி மற்றும் இறால்குழிப் பகுதிக்கு இடையேயான படகுச் சேவையில் தொழிலாளராக பணியாற்றிக் கொண்டிருந்தவர்.

இதனிடையே சில நாட்களுக்கு முன்பு கடத்தப்பட்ட விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதியான கட்டைப்பறிச்சான் பிரதேச சார் அலுவலக ஊழியரான செல்லையா வர்ணகுலசிங்கத்தின் நிலைமை இதுவரை தெரியவரவில்லை. (ச-5)

# இனப்பிரச்சினைக்கான ஆலோசனை சபை கூடுகிறது

இலங்கை இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வை முன்வைப்பதற்காக நியமிக்கப்பட்ட ஆலோசனை சபையானது அடுத்த வாரம் கூடவுள்ளதாக சமாதானச் செயலகப் பணிப்பாளர் பாலித கோகன்ன தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளிடம் முன்வைக்கப்படவுள்ள இறுதித் தீர்வுத் தொடர்பாக அனைத்துக் கட்சி மாநாட்டை பிரதிநிதித்துவப்படுத்தும்கட்சிகளினால் வழங்கப்படும் யோசனைகள் தொடர்பாக இந்த ஆலோசனை சபை ஆனது கவனம் செலுத்தும்என்றும் அவர் கூறியுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டுள்ள இந்தக் குழுவில்சட்ட நிபுணர்கள் மற்றும் அரசியல் அமைப்பு வல்லுநர்கள் இடம் பெற்றுள்ளனர். (ச-5)

## முக்கிய...

நடவடிக்கைகள் தடைபட்டு நாடு முகம் கொடுத்துள்ள நெருக்கடியான நிலையில் பிரதான எதிர்க்கட்சி என்ற வகையில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் மகிந்தவின் அரசாங்கத்தை ஆதரிக்கும் முறைபற்றி இக் கூட்டத்தில் விவாதிக்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-5)

## தலைவர்...

சதானந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச் சுடரினை வணிகர் ஒன்றியத் தலைவர் வெற்றியரசன் ஏற்றினார்.

தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றினார்.

இந்நிகழ்வின் போது தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனால் வழங்கப்பட்ட ஒரு லட்சம் ரூபா நிதியினை மாவட்ட மருத்துவ அதிகாரி சதானந்தனிடம் சோ. தங்கன் கையளித்தார். (ச-5)

## நூலை 5...

சியங்கள், வலிய சமர்களின் வலிமைகள், புலிப்படையின் புயல்கள், புனிதர்கள் எமது கரும்புலிகள். எதிரிகளால் எம்தேசமே தீவிட்டு எரிந்தபோது சிங்களப்பட்டாளங்கள் எமது தேசத்தின்மீது தாண்டவம் ஆடிய போது எழுந்து நின்று களம் புகுந்தவர்கள் இக் கரும்புலி வீரர்கள்.

தானுண்டு தன்குடும்பம் உண்டு என்று வாழும் நம்மவர் இடத்தில் இருந்து தானைத் தலைவன் வழியில் சென்று தன்மானத்தின் சிகரங்களாக தம்மை மாய்ப்பவர்களின் தியாகங்கள் செல்லுதற்கரியவையாகும்.

கரும்புலிகளின் உணர்வுகளை எந்த நிபுணர்களாலும் கணிக்க முடியாது. அத்தகைய புரியாத புதிர்கள் தலைவனின் சுண்டு விரல் அசையும் திசையெங்கும் தடை உடைப்பவர்கள்.

இத்தகைய தியாகங்களின் சிகரங்களை தமிழ் பேசும் மக்கள் அனைவரும் தலை வணங்கி இந்நாளில் நினைவு கூருவோம். அத்தோடு காலத்தின் தேவையாகவுள்ள விடுதலையின் உயரிய வீச்சைப் பெற்று எதிரிகளை எம் மண்ணைவிட்டு விரட்டுவோம் என சபதம் எடுப்போமாக என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## வல்வையில்...

ரூபாய் மதிப்புள்ள மீன்பிடிவலைகளும் உபகரணங்களும் நாசமடைந்தன. கடற்படையினரது இந்தத் தாக்குதலின்போதே இரு மீனவர்களும் காணாமல் போயுள்ளதாக கண்காணிப்புக்குழு மற் றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை மாவடியைச் சேர்ந்த தேவமணி அருள்(வயது-30) மற்றும் மூன்று குழந்தைகளின் தந்தையான கிருஷ்ண பிள்ளை சந்திரமோகன்(வயது-28) ஆகிய இருவருமே காணாமல் போனவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வடமராட்சிக் கடற்பரப்பில் அதியுயர் பாதுகாப்பு வலயத்தை நோக்கி வந்து கொண்டிருந்த படகுஒன்றை தாம் தாக்கி அழித்துள்ளதாக கடற்படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

தாக்கி மூழ்கடிக்கப்பட்ட படகு மீனவர்களினதாக இருக்கலாம்என சந்தேகம் தெரிவிக்கப்பட்டது. (ச-133,15,5)

## ஐரோப்பிய ஒன்றியம் பரிசீலித்தால்...

தமிழ் மக்கள் மீதான இராணுவச் செயற்பாடுகள் போர்க்காலத்தைப் போல் உள்ளது. வன்முறைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு ஒரே வழி இராணுவத்தினரை அவர்களது முகாம்களில் தடுத்து வைப்பதுதான் என்பது எமது நம்பிக்கை.

இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக் குழுவினராகிய கருணா குழுவினரது ஆயுதங்களை அரசாங்கம் களைய வேண்டும்.

தமிழர் தாயகப் பிரதேசத்தில் இராணுவத்துடன் சேர்ந்தியங்கிக் கொண்டு வன்முறைச் சூழலை அவர்கள் உருவாக்கி வருகின்றனர்.

தமிழர் தாயகத்தில் அவர்களது செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும். விமானக் குண்டு வீச்சு, ஆட்லறித் தாக்குதல், ஆழ ஊடுவுரும் தாக்குதல் என்று தமிழர் தாயகப் பகுதிக்குள் இராணுவத்தினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

பொதுமக்கள் காணாமல் போதல், குடும்பம் குடும்பமாக மக்கள் கொல்லப்படுதல் ஆகியவற்றைப் பார்க்கும்போது அரசாங்கம் ஒரு முழு அளவிலான யுத்தத்திற்கு தயாராகி வருவதாகத் தெரிகின்றது.

தற்போதைய வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வர வேண்டுமானால் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை உடனே நடைமுறைப்படுத்த வேண்டும்.

ஐரோப்பிய ஒன்றியம் ஆனாது தனது நிலைப்பாட்டை மாற்றி எம்மை சமதரப்பாகக் கருதி அமைதி முயற்சிகளில் இருதரப்பினருக்கும் இடையே நடுநிலையோடு செயற்படுமேயானால் நாமும் ஐரோப்பிய கண்காணிப்புக் குழுவினர் தொடர்பான நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்ய முடியும்.

ஐரோப்பியத் தடை நடைமுறையில் இருக்கும்போது அந்நாட்டினரும் கண்காணிப்புக் குழு வில் இடம்பெற்றால் அமைதி முயற்சிகளில் குழப்பமான நிலைமைகளே ஏற்படும். கண் காணிப்புக் குழுவினரது பணிகளிலும் குழப்பமான நிலை உருவாகும் என்றார் தமிழ்ச்செல்வன். (ச-5.6)




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் ரோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.07.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.